விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 09 செவ்வாய்க்கிழமை (22.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# காணிகளை மீள ஒப்படைத்து

# மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துக

## ஆளுங்கட்சி, த.தே.கூட்டமைப்பினர் ஒருமித்துக் குரல்

அரசாங்கத்தினாலும் மற்றும் இராணுவத்தினராலும் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அம் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டு மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஒருமித்த குரலில் அரசிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை அமைச்சரவையில் விசேட பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனின் மற்றுமொரு வீடு கண்டுபிடிப்பு

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தங்கியிருந்த மேலும் ஒரு வீட்டை இராணுவத்தினர் கண்டுபிடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

20 ஆம் பக்கம் பார்க்க....

## பார ஊர்தி குடைசாய்வு; உடல் நசுங்கி ஒருவர் பலி





(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த பார ஊர்தி திடீரென மின் கம்பத்துடன் மோதி குடைசாய்ந்ததில் அதில் பயணித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்த அதேவேளை மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கொமர்ஷியல் வங்கிக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றது.


இதில் பார ஊர்தியில் பயணித்த றொக்ஷன் (வயது 35) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

மேலும் விபத்தில் படுகாயமடைந்த மூவர்

20 ஆம் பக்கம் பார்க்க....

## மாகாணசபை தனி அதிகாரங்களில் மத்திய அரசு கை வைக்க முடியாது

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் முதலமைச்சர் கடும் சாடல்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியுடனும், அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட பல நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்த போதும் அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரசாங்கக் கட்டமைப்புகளே வடமாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றது இந்த அரசு என

20 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழின அழிப்பை நோக்கி தேசிய கொள்கை உருவாக்கம்

### விவசாய அமைச்சர் காட்டம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை அரசின் தேசிய கொள்கையானது ஒட்டுமொத்த தமிழ் இனத்தையே அழிக்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின்

20 ஆம் பக்கம் பார்க்க....

### நல்லிணக்க விவகாரம்

## இலங்கை வருகிறார் தென்னாபிரிக்க தூதுவர்



(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவினால் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சிறில் ரமபோசா அடுத்த மாத இறுதியில் அல்லது யூன் மாத ஆரம்பத்தில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து நல்லிணக்க முயற்சி மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுக்க தென்

20 ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.கூட்டமைப்பு இடம்பெறாத தெரிவுக்குழுவால் பயனில்லை!

### அரசின் அழைப்பை நொந்து கொள்கிறார் திஸ்ஸ

(கொழும்பு)


நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கு நேர்மையான பற்றுறுதி இல்லாத நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைப்பது அர்த்தமற்றது என்று அரசின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியிருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு காணும் விடயத்தை அரசு கையாளும் முறைமை குறித்து மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றது.

நம்பகத் தன்மையை அரசு சம்பாதிக்கத் தவறியதால்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்தது.

இவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு மீண்டும் அழைப்பது அதற்கு உதவும் என்று அரசு கருதுமானால் அது நிலைமையைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளது என்று தான் அர்த்தம்.



20 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த கூறியனுப்பியதை பிரபாகரனிடம் தெரிவித்தேன்

## எரிக் சொல்ஹெய்ம் விளக்கம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தெரிவிக்க விரும்பிய செயதிகளைத்தான் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு தெரியப்படுத்தியதாக, முன்னாள் நோர்வே அமைச்சரும் இலங்கைக்கான விசேட சமாதான பிரதிநிதியுமான எரிக் சொல் ஹெய்ம தெரிவித்துள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் விசேட பிரதிநிதியாக செயற்பட்ட போது விடுதலைப் புலிகளுடன் பல்வேறு தொடர்புகளை கொண்டிருந்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பிரபாகரனிடம் பல செய்திகளை தெரிவிக்குமாறு மகிந்த என்னிடம் கேட்டார். அவர் உட்பட அனைவரும் அதனை அறிந்திருந்தனர் என சொல்ஹெய்ம் தனது டுவிட்டரில் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயின் பங்கு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை விளக்கும் புத்தகம் ஒன்று அடுத்த வருடம் வெளியிடப்பட உள்ளது.

அதில் மகிந்த ராஜபக்ஷ வழங்கிய செய்திகளை நோர்வே எவ்வாறு விடுதலைப் புலிகளிடம் சேர்த்தது உள்ளிட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான செயறபாடுகளின் அனுசரணையாளராக செயற்பட்ட சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் தலைமை, ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம், சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சியின் அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆகியவற்றுடன் பல்வேறு சந்திப்புகளை நடத்தியிருந்தார்.

எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அரசு என்பன விடுதலைப் புலிகளுக்கு தேவையான வகையில் செயற்படுவதாக குற்றம் சுமத்தியிருந்த சில அரசியல் கட்சிகள், இலங்கையில் செயற்பாடுகளில் இருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கை பிரஜை பிரான்ஸில் உயிரிழப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் சென்றிருந்த இலங்கையர் ஒருவர் இறந்த நிலையில் ஹோட்டல் அறையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர். இலங்கையின் கட்டுநேரிய பிரதேசத்தை சேர்ந்த 47 வயதான சுதேஷ் சந்தன பெரேரா என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இத்தாலியில் இருந்து இவர் குடும்பத்தினருடன் பிரான்ஸ் லூர்த்து மாதா ஆலயத்திற்கு யாத்திரை சென்றிருந்தார். இவருடன்மனைவி உறவினர்கள் மற்றும் வேறு சில இலங்கையர்களுடன் அவர் பிரான்ஸ் சென்றிருந்தார்.

அதன்பின்னரே அவர் தங்கிருந்த ஹோட்டல் அறையிலிருந்து பிரஸ்தாப நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (செ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-7122)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER


# இராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்தவில்லை - உதய பெரேரா

(யாழ்ப்பாணம்)

இராணுவத்திற்கு விருப்பத்தின் அடிப்படையில் பலர் தற்போது இணைந்து கொள்கின்றனர். விரும்பியோர் இணைந்துகொள்ளலாம். கட்டாயப்படுத்தி எவரையும் நாம் இணைத்துக்கொள்ளவில்லை. அத்தோடு, தேவையேற்படின் இராணுவத்திலிருந்து வெளியேறவும் முடியும் என யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கோடைத் திருவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவிக்கையில், இராணுவம் இன்று தொழிற் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது. தொழிற்பயிற்சி பெற்றவர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

கடந்த 1980ஆம் ஆண்டு காலம்வரை உயர்மட்ட பயிற்சிகள் பெற்றவர்களே இராணுவத்தின் இணைக்கப்பட்டனர். ஆனால் தற்போது அவ்வாறில்லை. கல்வித் தகைமையுள்ளவர்களை இராணுவத்தில் இணைத்து உரிய பயிற்சிகளை வழங்கு கின்றோம்.

இராணுவத்தில் இணைந்து பயிற்சி பெற்ற பின், தேவையேற்படின் இராணுவத்தில் இருந்து வெளியேறவும் முடியும். விரும்பியே படைப்பிரிவில் இணைந்து கொள்ள வேண்டும். எவரையும் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் நாம் இணைத்துக்கொள்ளவில்லை.

பயிற்சியளிக்கப்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள்ஆரம்பித்த பின்பு தொழில்வழங்குவோம் இவ்வாறு இணைககப்படுபவர்களுக்கு மாதம்30ஆயிரம்ரூபாயசம்பளத்துடன்மருத்துவச்செலவு, குடும்பத்திற்கான செலவு போன்ற கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

இந்த திட்டத்தின் நோக்கம் எமது நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதாகும். விருப்பத்தின் பேரில் இணைந்து தொழில்வாய்ப்பினை பெற முடியும். அவ்வாறு இணைவதன் மூலம் தங்களது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள முடியும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும் அதிகரிக்கச்செய்ய முடியும்.

எமக்கு கிடைத்துள்ள சுதந்திரத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக நாம் இணைந்து செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு உதவ முன்வருகிறது மலேசியா

(கோலாலம்பூர்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் என்பன இன்னும் முழுமையாக அபிவிருத்தியடையவில்லை என மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2009-ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற 30 வருடகால உள்நாட்டு போர் முடிவுக்கு வந்த நிலையில், இலங்கை அரசாங்கம் நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதை உறுதியாக்கியுள்ளது என இலங்கைக்கான மலேசிய தூதுவர் அஷ்மி சைமுதீன் குறிப்பிட்டுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்திலேயே மலேசிய நிறுவனங்கள் தொலைத் தொடர்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகளை செய்திருந்தன.

தற்போது மேலும் அதிக வாய்ப்புகள் கிடைத்துள்ளதுடன் அதனை மலேசிய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக இலங்கையில் ஹோட்டல் துறை வளர்ச்சியடைந்து வருகிறது.

கொழும்பில் அதிகளவில் ஹோட்டல்களை நிர்மாணிக்கும் பணிகள் உள்ளன. இந்த துறையில் அதிகளவான வாய்ப்புகள் உள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் இன்னும் முழுமையாக அபிவிருத்தியடையாத நிலையில், மலேசியாவுக்கு அங்கு உதவிபுரிவதற்கான மகத்தான வாய்ப்புகள் உள்ளன.

மலேசியாவுக்கும் இலங்கைக்கும் நல்ல இருதரப்பு உறவுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் இருந்து கடந்த வருடம் 64 ஆயிரத்து 51 பேர் மலேசியாவுக்கு விஜயம் செய்துள்ளனர். 2012 ஆம் ஆண்டு 62 ஆயிரத்து 821 பேர் மலேசியாவுக்கு விஜயம் செய்துள்ளதுடன் அந்த எண்ணிக்கை இரண்டு வீதமாக உயர்ந்துள்ளது.

இந்த வருடம் 70 ஆயிரம் இலங்கை சுற்றுலாப் பயணிகள் மலேசியாவுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை மலேசியாவை சேர்ந்த தனியார் நிறுவனங்கள் இலங்கையில் 1.5 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிககின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் முருகதாசன்



வங்களாலேன் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் முருகதாசன் 21.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் (சுன்னாகம்) வைத்திலிங்கம், இராசம்மாவின் அன்புமகனும் தயானியின் அன்புக் கணவரும், மணி மேகலா, விக்னேஸ்வரன், புனிதவதி, தாட்ஷாயினி (யூனியன் கல்லூரி - மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவமலர் (லண்டன்), காலஞ்சென்ற ஞானமலர், அருந்ததி (பிரான்ஸ்), சந்திரமலர், சிவகுமாரி, பாலகௌரி (கனடா) பாலசரஸ்வதி, கண்ணதாசன் (கண்ணதாசன் பான்சி - சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தம்பி, சிறிவரதலிங்கம் மற்றும் தங்கராசா (பிரான்ஸ்), தேவராசா, சந்திரகுமாரன், வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவரார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.04.2014 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா வீதி,
மல்லாகம்.

தகவல் : கண்ணதாசன் (சகோதரன்)
கண்ணதாசன் பான்சி,
சுன்னாகம்.

(6192)

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய முகாமைத்திட்ட மறுசீரமைப்பு



நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஏற்கெனவே வரைபு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ள முகாமைத்திட்டத்தில் தற்போதைய கால நடைமுறைக்கு ஏற்ப சில முக்கியமான மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு ஏதுவாக 30.03.2014 அன்று கூடிய வழிபடுனர் மகரசபையின் விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முகாமைத் திட்ட மறுசீரமைப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முகாமைத்திட்டத்தில் சில மிக முக்கியமான மாற்றங்களையும் திருத்தங்களையும் தற்போதைய மற்றும் எதிர்கால தூரநோக்கை கருத்தில் கொண்டு மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில், பற்றுறுதி கொண்ட அடியவர்களிடம் இருந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கள் ஆலோசனைகளை 25.05.2014-ம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், முகாமைத்திட்ட மறுசீரமைப்பு குழு, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு' என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமே அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு : தற்போது நடைமுறையிலுள்ள முகாமைத்திட்டத்தை ஆலய நிர்வாக காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்**

**திரு.ப.க.பரமலிங்கம்**
அறங்காவலர்சபை உறுப்பினரும்,
முகாமைத்திட்டமறுசீரமைப்புக்
குழுவின் தலைவரும்,
நயினாதீவு நாகபூசணி அம்மன்
கோவில், நயினாதீவு.

**திரு.க.மோகனரூபன்**
அறங்காவலர்சபை செயலாளரும்,
முகாமைத்திட்டமறுசீரமைப்புக்
குழுவின் செயலாளரும்,
நயினாதீவு நாகபூசணி அம்மன்
கோவில், நயினாதீவு.

(C-7125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனாவின் செயற்பாடுகள் முஸ்லிம்களை அச்சுறுத்துகின்றன

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

**சட்டத்தை மீறி நடந்து கொள்ளும் பொதுபல சேனாவின் போக்குகளுக்கு ஒருவித ஆசீர்வாதம் இருப்பதைப் போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. இது முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.**

**எனவே, இது தொடர்பான சந்தேகங்களைப் போக்கி சமூகங்களுக்கிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் தார்மீகக் கடமையாகும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பொதுபலசேனாவின் நடவடிக்கைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ள கருத்துக்களை அடுத்து, பகிரங்க விவாதத்துக்கு வருமாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு பொதுபல சேனா விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் மக்களை அச்சுறுத்தும் வகையிலும், கீழ்த்தரமானவையாகவும் அமைந்துள்ளன. முஸ்லிம் மக்களால் போற்றப்படும் புனித குர்ஆனை அவமதிக்கும் வகையில் நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறானவர்களின் நாகரிகமற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் சட்ட ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித பீதியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன என்று பலரும் கூறுகின்றனர். இந்த நாட்டில் பௌத்த சிங்கள மக்கள் மட்டுமே வாழ வேண்டும் என்ற ஓர் சிந்தனையில் அவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அதுமட்டுமன்றி, தான்தோன்றித்தனமான, கீழ்த்தரமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர். புனித குர்ஆனை அவர்கள் இழிவுபடுத்துகின்றனர். இது முஸ்லிம் மக்களின் மனதை புண்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறான தீவிரவாதப் போக்குடைய அமைப்புக்களுடன் நான் விவாதத்தில் கலந்து கொள்ள ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை.

அதுவே அவர்களுக்கு கிடைக்கும் அங்கீகாரமாகவும் அமைந்துவிடும். அவர்களின் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை இதர பௌத்த குருமாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த குழுவினருக்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க பொலிஸார் தயக்கம் காட்டக் கூடாது.

இவர்கள் சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் அதனைத் தட்டிக் கேட்க வேண்டும். காவியுடையுடன் இவ்வாறு அவர்கள நடந்து கொள்ளும் போது கூட்டத்தின் பாதுகாவலர்கள் தயக்கம் காட்டு நிலை காணப்படுகின்றது.

இவர்கள் எவரது அனுக்கிரகமும் இன்றி தன்னிச்சையாகவே செயற்படுகின்றார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய தார்மீகக் கடமை இன்று ஏற்பட்டுள்ளது என்றார். (2)

### ஸ்ரீ சத்திய சாயி ஆராதனை மஹோற்சவம்

ஸ்ரீசத்தியசாயி ஆராதனாமஹோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை சேர் .பொன்இராமநாதன் வீதியிலமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.


அன்றைய தினம் காலை நிகழ்வுகளாக பஜனை, கணபதீப்பிள்ளை ராகவேந்திரனின் இசை ஆராதனை,பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் ஆ.ஜெகன்நாதனின் சிறப்புரை, விசேட வீடியோ காட்சி என்பன இடம் பெறும்.

பிற்பகல் நிகழ்வுகளாக சாயி அன்பு பொதி,பாலவிகாஸ் மாணவர்களின் நாடகம்;சாயி கீதங்கள், யாழ்.மெற்றோ கிளை ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ். சுந்தரேஸ்வரனின் சிறப்புரை என் பன இடம் பெறும். (2)

# வடமாகாண முதலமைச்சருடன் அரசு இணைந்து செயற்படவில்லை

## சாடுகிறார் அமைச்சர் வாசுதேவ





வடக்கு மாகாணசபைக்கு அரசாங்கம் போதிய உதவிகளை செய்யவில்லை என்று தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, வடமாகாண முதலமைச்சருடன் கலந்தாலோசித்து எந்த விடயத்தையும் அரசாங்கம் செய்யவில்லை என்றும் அமைச்சர் குற்றம சுமத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையை சீராக நடத்த அரசாங்கம் உதவிகளை வழங்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுமத்தியிருந்த குற்றச்சாட்டு குறித்து, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சமாஜவாத மக்கள் முன்னணி என்ற ரீதியில் நாம் வேண்டுகோள் ஒன்றை ஏற்கனவே முன்வைத்துள்ளோம்.

இந்த நாட்டில் இன் ஐக்கியத்தை ஏற்படுத்த தாம் உருவாக்கிய உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுள்ளோம்.

வடக்கு மாகாண சபையுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படும்படியும் மனிதவுரிமைகள் செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் படியும் நாம் அரசைக் கேட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் ஆர்வம் அரசாங்கத்திற்கில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதனை காலதாமதப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இனப்பிரச்சினைக்கு துரிதகதியில் தீர்வு வழங்க வேண்டும் என்ற ஆர்வம் அரசாங்கத்திற்கு கிடையாது.

இதன் காரணமாகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து தீர்வுத் திட்டம் வழங்குவதனை கால தாமதப்படுத்தி வருகிறார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென அரசாங்கம் மெய்யாகவே விரும்பினால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை அமைக்க வேண்டிய அவசியமில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என நாம் கொள்கை ரீதியாக தீர்மானித்துள்ளோம்.

வடக்கு மக்களை அரசாங்கம் அடக்கி ஆழ முயற்சித்து வருகிறது என்றார். (2)

# இன்றைய இராசி பலன்

**22.04.2014**

**(சித்திரை 09, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு**
**அட்டமி பின்னிரவு 12.38 மணிவரை**
**உத்தராடம் பிற்பகல் 4.59 மணிவரை**
**இராகுகாலம் 3.01-4.31 மணிவரை**
**சுபநேரம் 10.31-12.01 மணிவரை**

**வளவன்**

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கனவு பலிதமுண்டு, ஆரோக்கியமான நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கலாம்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைச் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், தொலைதூரத் தகவல்கள் மகிழ்ச்சிதரும், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், தேகநலனில் புத்துணர்வு ஏற்படும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்த முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், வளர்ச்சி கூடும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்:** பொதுநல ஈடுபாடு கூடும், அம்பிகையை வழிபட்டு காரியம் தொடக்க வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**கும்பம்:** மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும்.

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னர் பணிபுரிந்த வேலைக்கே எம்மை உள்வாங்குங்கள்

## பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் பதில் பரிசாரகர் மற்றும் குடும்பநல உதவியாளர்களாக கடமையாற்றியவர்கள் தம்மை மீண்டும் தாம் பணிபுரிந்த வேலைக்கே உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையில் பதில் பரிசாரகர் மற்றும் குடும்பநல உதவியாளர்கள் ஆகிய நாம் இதுவரைகாலமும் தற்காலிக ஊழியர்களாக கடமையாற்றி 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளோம்.

தற்போது மாநகரசபை நிரந்தர நியமனத்திற்கான விண்ணப்பம் கோரலின் போது, இதுவரை காலமும் நாம் சுகாதார தொழிலாளியாக உள்வாங்கப்பட்டே பதில் பரிசாரகர் வேலைக்கு அமர்த்தப்பட்டதால் விண்ணப்பம் கோரலின் போதும் சுகாதார தொழிலாளி என்ற பிரிவிற்கே நாங்கள் விண்ணப்பித்தோம்.

ஆனால் தற்போது சுகாதார தொழிலாளி என்ற பிரிவிற்குள் பதில் பரிசாரகராக கடமை புரிய முடியாது என கூறியுள்ளதால் நாம் வேறு பகுதிகளிற்கு விண்ணப்பம் அனுப்பவில்லை என்பதாலும் நாம் மிகவும் இக்கட்டான நிலையிலுள்ளோம்.

எனவே எம்மை நாம் பணிபுரிந்த வேலைக்கே உள்வாங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்தனர். (2-4)

நன்றி-ஐலண்ட்




# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பதில் தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிரந்தர நியமனம் வழங்குவோம் என பல தடவை அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே அவர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நீர்வேலைப்பகுதி, வேலைப்பகுதி, சுகாதாரப் பகுதி, சுத்திகரிப்பு தொழிலாளர்களே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

எமக்கான நிரந்தர நியமனம் கடந்த ஜனவரி மாதம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் அதனை மாறாக முதல்வரோ அல்லது பிரதித் தொழில் ஆணையாளரோ நிறைவேற்றவில்லை.

நாம் 71 பேரும் கடந்த 7 மாதங்களாக வேலை எதுவுமற்ற நிலையில் உள்ளோம். இதனால் எமது பிள்ளைகள் பாடசாலை செல்ல முடியாமலும் மூன்றுவேளை உணவு சாப்பிட முடியாமலும் தவிக்கின்றனர்.

எம்மால் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட போராட்டங்களின் போது எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக யாழ். மாநகரசபை முதல்வர், பிரதித் தொழில் ஆணையாளர் ஆகியோர் உறுதியளித்திருந்தனர். ஆனால் இன்றுவரை இவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தனர்.




நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் யாழ்.மாநகரசபை நிர்வாகமே எம்மை மனிதராக மதியுங்கள்!, ஆணையாளரே மூப்படிப்படையில் நியமனத்தைத் தாருங்கள், ஆளுநரே உங்கள் கரங்களினால் எமக்கான நியமனத்தைத் தாருங்கள், நாங்கள் அனைவரும் இலங்கையில் வாழ தகுதியற்றவர்களா? ஆயிரத்து 500 நாட்களுக்கு மேல் வேலை செய்த நாம் நியமனத்திற்கு தகுதியில்லாதவர்களா? ஆணையாளரே நாங்கள் கேட்பது சலுகை அல்ல எமது உரிமையே, தொழிலாளர்களாகிய எமது வறுமையை அரசியல் ஆக்காதீர்கள், ஆணையாளரே நீதியின் பக்கம் நில்லுங்கள், ஆளுநர் அனுமதி வழங்கியும் ஏன் எமக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இப்போராட்டத்தின் போது வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அதில்,

யாழ்.மாநகர சபையில் எட்டுமுதல் ஒன்பது வருடகாலமாக வேலைசெய்த பதில் தொழிலாளர்களாகிய எமக்கு 26.12.2013 ஆம் திகதியன்று நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு தாங்கள் அனுமதி வழங்கியிருந்தும் சுமார் 5 மாத காலமாக நியமனங்கள் எவையும் மாநகர சபை ஆணையாளரால் இன்றுவரை தரப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக ஆணையாளரிடம் சென்று கலந்துரையாடும்போது இந்த மாதம் தருவேன், வருகின்ற மாதம் தருவேன் என்று எம்மை ஏமாற்றுகிறார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசிகளின் உயர்வின் மத்தியில் எமது குடும்பத்திற்கு ஒருவேளை உணவு கொடுப்பதற்கு நாம் மிகவும் கஷ்டப்படுகின்றோம்.

எமது வாழ்வில் விடியலைக் காண்பதற்கு ஆளுநராகிய தாங்கள் இவ்விடயத்தில் தலைமையேற்று தங்கள் கரங்களினால் எமக்கான நியமனத்தினைத் தந்து உதவுமாறு மிக, மிக பணிவன்புடன் கேட்டு நிற்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமக்கான உரியதீர்வு கிடைக்கப்பெற்றால் தான் நாம் இப்போராட்டத்தினைகைவிடுவோம் என தொழிலாளர்கள் தெரிவித்தனர். (2-4)




## விண்ணப்பத்திகதி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.நகர்மைய றோட்டறக் கழகத்தால் நடத்தப்படும் தேடல்-15, பொதுஅறிவு, நுண்அறிவு போட்டிப் பரீட்சையின் விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் மே மாதம் 20 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியின் முடிவுத்திகதி மே மாதம் முதலாம் திகதியென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது திகதி மாற்றப்பட்டுள்ளது. (அ)

# மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன



(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு பிரான்பற்று வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை பண்டத்தரிப்பு, பிரான்பற்று விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் விளையாட்டு நிகழ்வின் போது விருந்தினர்கள் வீட்டில் இருந்து தம்முடன் எடுத்துச் சென்ற உணவுகளை அக்கிராமத்தில் உள்ள உடல், உள ரீதியாக வலிமை குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு விருந்தாக வழங்கினர்.

அத்துடன் பிரான்பற்று கிராமத்தைச் சேர்ந்த கனடா வாழ் பவளராஜாவின் நிதியுதவிகளிலிருந்து ஒவ்வொரு மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உடைகளும் ஐயாயிரம் ரூபா பணப்பரிசில்களும் வழங்கப்பட்டது. (2-23)

# வாள்வெட்டுக்கு இலக்கானவர் கொழும்பு வைத்தியசாலையில்

யாழ். மல்லாகம் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை (19) நள்ளிரவு வாள்வெட்டுக்கு இலக்கான தவனேஸ்வரன் நிருபன் (வயது- 30) ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு குறித்த இளைஞர் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் வாள்வெட்டை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர.

சுன்னாகம், சூராவத்தையைச் சேர்ந்த மேற்படி நபர் ஒரு பிள்ளையின் தந்தையாவார். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையிலும் கைது செய்யப்படவில்லையெனவும் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மல்லாகம் பகுதியில் அதேதினத்தில் மூன்று இளைஞர் மீது முகத்தினை துணியினால் மூடிக்கொண்டு வந்த குழுவினர் தாக்குதல் மேற்கொண்டதில் குறித்த மூன்று இளைஞர்களும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை பொலிஸாரும் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் இணைந்து சித்திரைப் புத்தாண்டு இசை நிகழ்ச்சியை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடத்தியது.

இதன்போது, இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே இத்தாக்குதல் சம்பவங்களுக்கு காரணமென்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளினை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவகால ஆன்மீக உரைகள்

புன்னாலைக்கட்டுவன்– திடற்புலம் நரசி ங்க வைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம் பமாகி நடைபெற்று வருகின்றது. இம் மஹோற் சவ காலத்தினை முன்னிட்டு மேற்படி ஆலய பரிபாலனசபையினரும் இந்து கலாசார அலுவ ல்கள் திணைக்களமும் இணை ந்து நடத்தும் மஹோ ற்சவகால ஆன் மீக உரை கள் தினமும் இரவு 7 மணி தொட்க கம் 8 மணி வரை ஆலயத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. தர்ப் பணா சுதர்சன் தலைமையில் நடைபெறுகிறது.

இம் மஹோற்சவ கால ஆன்மீக உரையில் நாளை புதன்கிழமை சமுதாய நெறிப்படுத்தலில் இந்து சமயம் எனும் தலைப்பில் சைவப்புல வர் நித் திய தசீதரனின் உரையும் நாளை மறுதினம் வியா ழக்கிழமை என்கடன் பணிசெய்து கிடப்பதே எனும் தலைப்பில் சொற்பொழிவாளர் நி.பகீ தரன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். அதனைத் தொட ர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம் எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன், மறுநாள் சனிக்கிழமை பாடும் பணி எனும் தலைப் பில் சைவப்புலவர் கா.கமலநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை அம்பிகை கடாட்சம் எனும்தலைப் பில் சைவப்புலவ்ர் கா.கமலநாதன் உரை இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு

### முல்லைத்தீவு பட்டண பொதுச் சந்தைக் கட்டடத்தின் மேற்தள கடைகளுக்கான உரிமை வைப்புப் பண கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2014 மே மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2014 டிசெம்பர் மாதம் 31ஆம் தகதி வரையான முதலாம்வருடத்தின் பகுதி காலப்பகுதியில்வரும் மாதம்ஒன்றிற்கு ரூபா 4000.00 (நான்காயிரம்) வீதம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைக ளுக்கான திறப்புப்பண் ( உரிமை வைப்பு பணத்திற்கான) கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 22.04.2014 தொடக்கம் 28.04.2.2014 வரை**

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 29.04.2014 காலை 10.00 மணி வரை**

**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 29.04.2014 காலை 10.30 மணி**

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப் பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலு றையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 29.04.2014 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 29.04.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன ன்ர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1.கேள்விப்பத்திரங்களை பெற விரும்புப்வர்கள் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2.கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக் கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிரா கரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

4.ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5.கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.

7.வாடகை வருடா வருடம்/ சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.

8.கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனு மதிக்கப்படுவர். (உ+ம் மகன், மகள்)

9.சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

10.நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

11.தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத் திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழு மையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

12.வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தல் இன்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

13.சபையின் செயலாளரின் இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்போம் என்றும் இது தொடர்பாக சபைக்கெதிராகவோ/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

14.கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடை இலக்கம் 11 | 1500.00 | 40.000.00 | 400.000.00 |
| 2 | கடை இலக்கம் 12 | 1500.00 | 40.000.00 | 400,000.00 |
| 3 | கடை இலக்கம் 16 | 1500.00 | 40,000.00 | 400.000.00 |
| 4 | கடை இலக்கம் 17 | 1500.00 | 40.000.00 | 400.000.00 |
| 5 | கடை இலக்கம் 18 | 1500.00 | 40.000.00 | 400.000.00 |

**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு**
**21.04.2014.**

**சு.ரவீந்திரநாதன்,**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு**

# RAVEENS EMC KARAVEDDY

## G.C.E. O/L Results-2013

| | Name | Final Result | Mat | Eng | Tamil | Sci | Hist | Relig | ICT | Eng.lit | Geo | Com |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | K.Kajaruban | 8A,C | A | A | A | A | A | A | A | C | - | A |
| 2 | M.Thusitha | 8A,C | A | A | A | A | A | A | A | C | - | A |
| 3 | T.Jesutha | 8A,C | A | A | A | A | A | A | A | C | - | A |
| 4 | S.Vaisnavi | 8A,C | A | A | A | A | A | A | A | C | - | A |
| 5 | V.Thulasikan | 8A,S | A | A | A | A | A | A | A | S | - | A |
| 6 | P.Senthuran | 7A,B.C | A | A | A | B | A | A | A | C | - | A |
| 7 | E.Edmanluxsan | 7A,B.S | A | A | B | A | A | A | A | S | - | A |
| 8 | S.Rogulan | 7A,B.S | A | A | B | A | A | A | A | S | - | A |
| 9 | P.Thushyanthini | 7A,B.S | A | A | B | A | A | A | A | S | - | A |
| 10 | P.Vinojan | 5A,3B.C | A | A | B | A | A | A | B | C | B | -- |
| 11 | V.Thiruparan | 5A,3B,C | A | B | B | A | A | A | A | C | - | B |
| 12 | S.Kirushshiya | 5A,3B,S | A | A | A | B | B | A | B | S | - | A |
| 13 | T.Kartheepan | 5A,2B,C,S | A | C | B | B | A | A | A | S | - | A |

Except Tamil Language and Religion all the Students appeared For the exam in English Medium

**P.Easwaranathan B.Sc (Agr) Hons.**
**Dip.in Edu.**
**Director Raveens E.M.C**
**Karaveddy**

(C-7121)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 9.75 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L / அரச சாரதி<br>தொ.இ: B/1340 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L /அரச வாடிக்கையாளர் சேவை உத்தி யோகத்தர்<br>தொ.இ: G/1918 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 72 சூரி, செவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / தனியார் வேலை (மலேசியா)<br>தொ.இ: B/1341 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 19.5 சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1919 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 50.75 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (டோகா)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/1345 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 20 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1921 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 23.25 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / இலத் திரனியல் மெக்கானிக்<br>தொ.இ: B/1350 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 13.75 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / வெளிநாட்டு நிறுவன வேலை<br>தொ.இ: G/1922 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களுக்காக சோனியா முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்

## தேர்தல் பிரசார கூட்டத்தில் தமிழக முதல்வர் "ஜெ" சாடல்

(கொழும்பு)

**தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு சாதகமாக செய்வதை எல்லாம் செய்து விட்டு தேர்தல் வந்தவுடன் மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார் சோனியா காந்தி என்று தமிழக முதல்வரும், அதிமுக பொதுச் செயலருமான ஜெயலலிதா சாடினார்.**

திருவொற்றியூரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடந்து கூறுகையில்,

அண்மையில் கன்னியாகுமரி பொதுக் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, தமிழக மீனவர் பிரச்சினையில் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அக்கறை காட்டவில்லை என்றும், இந்தியா - இலங்கை மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக்கு காங்கிரஸ அரசு தான் காரணம் என்றும் பேசியுள்ளார். இதில் எள்ளளவும் உண்மை இல்லை. மாறாக மீனவர்களை வஞ்சித்த அரசு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு.

மீனவர்களின் நண்பனாக விளங்குகினற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை மீனவப் பெருமக்கள் நன்கு அறிவார்கள். எனவே, தமிழக மீனவர்கள் பிரச்சினையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அக்கறை செலுத்தவில்லை என்று சொல்வதை மீனவர்கள் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு முக்கிய காரணம் கச்சதீவு இலங்கை அரசாங்கத்திற்கு தாரை வார்க்கப்பட்டது தான். 1974 மற்றும் 1976-ஆம் ஆண்டைய ஒப்பந்தங்களின் மூலம் முன்னாள் பிரதமர் இந்திரா காந்திதான் இலங்கை நாட்டிற்கு கச்சதீவு தாரை வார்க்கப்பட்டது. அப்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

கச்சதீவை தாரைவார்த்த ஒப்பந்தங்கள் செல்லத்தக்கதல்ல என அறிவிக்க வேண்டும் என்று கூறி உச்ச நீதிமன்றத்தில் 2008-ஆம் ஆண்டு நான் வழக்கு தொடர்ந்தேன். இதற்கு மத்திய காங்கிரஸ் அரசு என்ன பதில் மனு தாக்கல் செய்தது?

கச்சதீவு இந்திய நாட்டின் ஒரு பகுதியே அல்ல என்று கூறி ஜெயலலிதாவின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு மத்திய காங்கிரஸ் அரசு மனு தாக்கல் செய்தது. இது தான் மீனவர்கள் மீது மத்திய காங்கிரஸ் அரசு கொண்டுள்ள அக்கறையா? இது மீனவர் விரோதச் செயல் இல்லையா?

இது சோனியா காந்திக்கு தெரியாதா? ஒன்றுமே தெரியாதது போல் சோனியா காந்தி பேசுகிறாரா? இப்படிப்பட்ட சோனியா காந்தி தமிழக மீனவர்கள் பிரச்சினையில் எனது தலைமையிலான அரசு அக்கறை செலுத்தவில்லை என்று கூறுவது நகைப்புக்குரியது ஆகும் கேலிக்கூத்தானது ஆகும்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, அன்றாடம் பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதிக் கொண்டு இருக்கிறேன். இதன் மீது மத்திய காங்கிரஸ் அரசால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

தமிழக மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இடையே 2010-ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்ற மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? 2011-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவுகளை ஏன் மத்திய காங்கிரஸ் அரசு வெளியிடவில்லை? இதனை அனுப்புமாறு நாங்கள் கேட்டும், அனுப்பாமல் மத்திய காங்கிரஸ் அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது என்பதை சோனியா காந்தி விளக்க வேண்டும்.

தமிழக மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்பு, சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, அதனை நிறைவேற்றிக் காட்டிய அரசு, எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

ஆனால், இந்தப் பேச்சு வார்தைக்கு காரணமே காங் கிரஸ் அரசு தான் என்று சோனியா காந்தி பேசி இருக்கிறார்! இது என்ன பித்தலாட்டம்?


தமிழக மீனவர்களை அடித்து துன்புறுத்துவதையே வாடிக்கையாக கொண்டிருக்கும் இலங்கை இராணுவத்தினருக்கு, இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று நான் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினேனே? ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

தமிழக மீனவர்களுக்கு எதிராக, இலங்கை அரசுக்கு சாதகமாக செய்வதை எல்லாம் செய்து விட்டு, தேர்தல் வந்தவுடன் மீனவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார் சோனியாகாந்தி. தமிழக மீனவர்கள் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சி போல் துரோகம் செய்த கட்சி வேறு எதுவுமே கிடையாது. மீனவர்களைப் பற்றி பேசுவதற்கு உரிய அருகதையே காங்கிரஸ் கட்சிக்கு இல்லை.

வாக்குக்காக தேர்தல் சமயத்தில் தமிழக மீனவர்கள் மீது கரிசனத்தை பொழியும் சோனியா காந்தி இதற்கு முன்பு இந்தப் பிரச்சினை பற்றி எங்காவது பேசியிருக்கிறாரா? பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தையாவது பேசி இருக்கிறாரா? என ஜெயலலிதா குறிப்பிட்டார்.

காங்கிரஸ் மற்றும் அதற்கு பக்கபலமாக இருந்த தி.மு.க. ஆகியவற்றின் மீனவ விரோத செயலுக்கு, இந்தத் தேர்த லில் நீங்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும். காங்கிரஸ் கட்சிக்கும், திமுக-வுக்கும் நீங்கள் சம்மட்டி அடி கொடுக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை அனைத்து தொகுதிகளிலும் நீங்கள் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும்என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். (2)



குளோறியஸ் யவ்னா பவுண்டேசன் நிறுவனத்தினால் பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 90 | 80 | 90 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 30 | 90 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60. | 70 | 80 |
| முருங்கைக்காய் | 40-60 | 80 | 80 | 100 |
| போஞ்சி | — | 120 | — | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 60-90 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | — | 80 |

### குளவி கொட்டிய 20 பேருக்கு சிகிச்சை

ஹற்றன் பொலிஸ பிரிவிற்குட்பட்ட டிக்கோயா மாணிக்க வதறை தோட்டத்தில தேயிலை கொழுந்து பறித்துககொண்டிருந்த 20 பெண் தொழிலாளர் கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் 8 பேர்டிக்கோயாமாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர.

இச்சம்பவம்நேற்று பிற்பகல்12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சிகிச்சைகளின் பின்னர் அவர்களில் சிலர் வீடு திரும்பியுள் ளதாகவும் மேலும சிலர் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டார [illegible]

## மரண அறிவித்தல்



### திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம் 19.04.2014 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மயில்வாகனம் (முன்னாள் ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செகராசசிங்கம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம்- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லம்மா சிவப்பிரகாசம் அவர்களின் அன்புச் சகோதரியும், ஜனநாயகம், (முன்னாள் பொறியியலாளர், லங்கா சீமெந்து நிறுவனம்- அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற செல்வநாயகம் (ஆசிரியர்), இராஜநாயகம் (Partner M.Rajanayagam & Co. Chartered Accountants, Thirunelvely), காலஞ் சென்ற கலாநிதி கதிர்காமநாயகம், (முன்னாள் விரிவுரையாளர், கணித புள்ளிவிபரவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) மற்றும் வேதநாயகி, ஜெகசோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜ.திருச்செல்வகுமாரி (அவுஸ்திரேலியா), இ.சிவறாஜினி (நரம்பியல் வைத்திய நிபுணர்- அவுஸ்திரேலியா), க.சாமினி (கனடா), இ.சிவராஜா (விரிவுரையாளர்- சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், இணைப்பாளர் வெளிவாரிப்பட்டப்படிப்புகள் அலகு, யாழ். பல்கலைக்கழகம்), பால்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் , ஜ. ராகுலன் (பொறியியலாளர் -அவுஸ்திரேலியா), ஜ.ஆதவன், ஜ. வியாசன், ஜ.கபிலன் (அவுஸ்திரேலியா), செ.திருபரன் (கனடா), இ. 'மாதங்கி (பட்டயக் கணக்காளர்- அவுஸ்திரேலியா) Dr.இ. சுபாங்கி (அவுஸ்திரேலியா), சி. மாதுர்யா, சி. பாரதன் (பொறியியலாளர்- DAIMEI SLK (Pvt) Lt. கொழும்பு) சி.வைஷ்ணவி (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), பா.சுவேதா, பா. பிருந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரா.ஆர்ஜன், ரா.அயெஜ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை சுதுமலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: ம.இராஜநாயகம்
M.Rajanayagam & Co Partner Ratnam & Co Paramesvara Junction,
Thirunelvely. 0779530496

(6188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் நேற்று கடும் வாதப் பிரதிவாதங்கள்














ஆளும்- எதிர்த்தரப்பிற்கு இடையில் கடுமையான வாதப்பிரதிவாதங்களுடன் நேற்றையதினம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் ஒருங்கிணைப்புக்குழுவின் செயலாளருமான சுந்தரம் அருமைநாயகத்தின் ஆரம்பஉரையுடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மீள்குடியேற்றம். இராணுவத்தினர் உள்ளிட்ட படைப்பிரிவினரின் தேவைக்கென பொதுமக்களின் காணிகளை சுவீகரித்தல். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை பழைய கட்டடத்தில் மீள இயங்க வைத்தல் தொடர்பாகவே மத்தியில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஈழமக்கள் ஜனநாயக்கட்சிக்கும் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையே இந்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதன்முறையாக நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபைக்கு முதன்முறையாக தேர்தல் நடைபெற்று மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்படவில்லை என்ற காரணத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட அக்கட்சியினர் எவரும் கூட்டத்தில் பங்கு பற்றாமல் புறக்கணித்திருந்தனர்.

அதேவேளை அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்தக் கூட்டத்திற்கு இணைத்தலைவராக செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக்காலை 9 மணியளவில் ஆரம்பமான யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதையடுத்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்றது.

இதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, மற்றும் அக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன். அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலெண்டின், ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம். வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், த.சித்தார்த்தன்,பா.கஜதீபன், கே.சஜந்தன், ச.சுகிர்தன், திருமதி அனந்தி சசிதரன், அ.ஆனோல்ட் உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

இதனைவிட யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் திணைக்களத்தலைவர்கள் எனப் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

ஆரம்பம் முதலே கூட்டத்தில் சலசலப்பு நிலவியதோடு ஆளும் எதிர்த்தரப்பினருக்கிடையே நக்கல் நையாண்டிகளும் இடம் பெற்றுக்கொண்டிருந்தன.

**முதல்உரை முதலமைச்சர்.**

நேற்றையதினம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவிற்கு முதன் முறையாக இணைத்தலைவராக செயற்பட்ட வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் இணைத்தலைவர்களில் முதலாவதாக உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். முதலமைச்சரின் உரையினையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றிருந்தார்.

முதலமைச்சர் தனது உரையில் அரசாங்கத்தையும் அதனுடன் இணைந்து அரசியல் ரீதியாக செயற்படும் கட்சிகளையும் கடுமையாக சாடியிருந்தார்.

இருப்பினும் முதலமைச்சரின் உரைக்கு பதிலளித்து நேரத்தை செலவு செய்ய தான் விரும்பவில்லையெனக்கூறிய அமைச்சர் டக்ளஸ், தனது உரையினை சுருக்கமாக முடித்துக்கொண்டு கூட்டத்தை தொடர்ந்து நடத்தவுள்ளதாக அறிவித்தார்.

இதனையடுத்து சென்ற கூட்ட அறிக்கையை அங்கீகரிக்குமாறு அமைச்சரினால் கூறப்படவே, இடம்பெயரந்த் மக்களின் மீள்குடியேற்றம், இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவித்து மக்களை அங்கு மீள்குடியேற்றுதல் வேண்டும், மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உட்கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப் படவேண்டும் போன்ற கோரிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினர்களினால் விடுக்கப்பட்டது.

**சலசலப்பு**

வலிகாமம் வடக்கில் மக்களை மீள் குடியேற்றுதல் மற்றும் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் காணிகளை மீளப்பெற்று மக்களை அங்கு மீள் குடியேற்றுதல் போன்ற விடயங்கள் குறித்து ஆளும் எதிர்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது தமிழ்த்தேசியக்கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இடையிடையே சிரிப்பை ஏற்படுத்தும் வகையில் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

குறிப்பாக ஒருவிடயம் குறித்து ஆராயப்பட்டு முடிவுறும் தருணத்தில் அந்த விடயம் தொடர்பாக தமது கருத்துக்களை முன்வைப்பார். இதனால் கூட்டத்தில் சிரிப்பொலியுடன் சலசலப்பு ஏற்படும்.

**4035 நாய்கள்.**

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் 4 ஆயிரத்து 35 கட்டாக்காலி நாய்கள் உள்ளன என யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். அதேவேளை இந்தக்கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த மாவட்ட கால்நடை திணைக்களத்தின் ஆலோசனைகளை தாம் நாடியிருந்த போதும் அந்த திணைக்களம் எந்த விதமான ஆலோசனைகளையும் வழங்க முன்வரவில்லை எனவும் குற்றம் சாட்டினார். இருப்பினும் கொழும்பிலிருந்து தனியார் வைத்திய அதிகாரிகளை வரவழைத்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

**ஒத்திவைப்பு.**

இதேவேளை நேற்று இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப் பட்டிருந்த பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்படாத காரணத்தினால் அடுத்த மாதம் 26, 27 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைப்பதாக அமைச்சர் அறிவித்தார். முதலமைச்சருடன் கலந்துரையாடியதன் பிரகாரமே இவ்வாறு கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக கூறினார்.

**எஸ்.ஆர்.கரன்**

# தெரிவுக்குழுவுக்கு வந்தால் மாத்திரமே கூட்டமைப்புடன் பேசுவது சாத்தியமாகும்



## அமைச்சர் கெஹலிய திட்டவட்டம்

(கொழும்பு)

**தேசிய பிரச்சினைக்கான தீர்வு முயற்சி என்றுவரும் போது அது பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடா கவே இடம் பெறவேண்டும். இந்த விடயத்தில் அரசாங் கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது சாத்தியமற்ற விடயமாகும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இலங்கை விவகாரம் குறித்து ஆராய்வதற்காக தென்னாரிபிரிக்க ஜனாதி பதியினால் நியமிக்கப்பட்டுள்ள விசேடபிரதிநிதி சிரில் ரம்போஷா விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறு கையில்,

அரசியல் தீர்வு என்ற விடயம் வரும்போது அனை த்துக் கட்சிகளும் கலந்துகொள ளக் கூடிய பாராளுமன்ற தெரி வுக்குழுவே பொருத் தமான தாக இருக்கும். இந்த இடத் தில் இரண்டு தரப்புக்கள் மட் டும் பேச்சுவார்த்தை நடத்துவது பொருத்தமாக அமையாது என் றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தலைமையிலான அரச மட்ட அமைச்சர்கள் குழு வும இரா. சம்பந்தன் தலைமை யிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவும் அண்மையில் தென னாபிரிக்காவுக்கு விஜயங் களை மேற்கொண்டு தென் னாபிரிக்க தரப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடத தியிருந்தன.

சர்வதேச நாடு ஒன்றின் ஊடாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்தத் தயார் என்று கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரம் குறித்து ஆராய்வதற்காக தென்னாரிபிரிக்க ஜன்ாதி பதியினால் நியமிக்கப்பட் டுள்ள விசேட பிரதிநிதி சிரில் ரம்போஷா விரைவில் இலங கைக்கு விஜயம் செய்யவுள ளமை தொடர்பில் எனக்கு போதுமான விடயங்கள் தெரி யாது.

ஆனால்நல்லிணகக செய ற்பாடு மற்றும் தேசிய பிரச் சினைக்கான தீர்வு விடய ங்கள் குறித்து அடிப்படை விடயம் ஒன்று உள்ளது. இந்த விடயம் குறித்து அரசா ங்கத்தின் நிலைப்பாடு மிக வும் தெளிவானதாகும்.

அதாவது தேசிய பிரச்சி னைக்கான தீர்வு முயற்சி என்று வரும்போது அதற்கு எவ்வாறான பின்னணிகள் அமைக்கப்பட்டாலும் தீர்வு என்பதுபாராளுமன்றத் தெரி வுக்குழுவின் ஊடாகவே இடம் பெறவேண்டும். அனைத்துக் கட்சிகளும் பங்குகொள்ளக் கூடிய பாராளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாகவே தீர்வை அடையமுடியும்.

எனவே அரசியல் தீர்வை அடைய வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டியது அவசியமாகும். தற்போதைய நிலைமையில் பாராளுமன்ற தெரிவுக் குழுநியமிக்கப்பட் டுள்ளது. அதில் கலந்துகொள் ளுமாறு கூட்டமைப்பை அழைத துள்ளோம்.

இதனைவிடுத்து தீர்வு விடயத்தில் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பும் பேச்சுவார்த்தை நடத் துவது என்பது சராத்தியமற்ற விடயமாகும். அவ்வாறு கூட் டமைப்பும் அரசாங்கமும் தனித் துபேச்சுவார்த்தை நடத்த முடியாது. தீர்வுவிடயத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு வுக்கு கூட்டமைப்பு வருவதே சிறந்த விடயமாக அமையும். இந்தவிடயத்தில் எவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலேயே தீர் வுயதார்த்தமானதாகும் சாத் தியமானதுமாகஅமையும்.

சர்வதேசத்தின் உதவியை நாடி நாட்டின் பிரச்சினை களை தீர்க்க வேண்டிய அவ சியம் எமக்கில்லை. தெரிவுக் குழுவில்பங்கேற்றால்மட்டுமே கூட்டமைப்புடன் பேச்சுவார் த்தை நடத்தப்படும். வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. தமிழர்களை காப்பாற்ற இரா ணுவத்தை பலப்படுத்த வேண்டும் .

இலங்கையில் சுட்டிக்காட் டுமளவிற்கு எந்தவொரு பிரச் சினையும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழப் பத்தினை ஏற்படுத்தும் வகை யில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. இனப்பிரச்சி னைகளுக்கு தீர்வு காணவே தாம் தமிழ் தேசியக் கூட்ட மைப்பினை பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்திற்கு அழைக்கின்றோம்.

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பிரச்சினைகள் இருக்கின்றதெனின் அதை இரு தரப்பினருமே பேசி தீர்வு காண முயற்சிக்க வேண டும். இரு தரப்பு பிரச்சினைகள் என்னவென்பதை முழுமை யாக இரு சாராரும் அறியாது சர்வதேசத்தை நாடுவதில் எவ்விதப் பயனும் இல்லை.

அரசாங்கம் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து இன்று நாட்டில் அமைதியை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் தமிழ் தேசியக் கூட்டமைப் பினர் சர்வதேசத்தை இலங் கைக்கு எதிராக திசை திரு ப்பி நாட்டில் மீண்டும் குழப் பங்களை ஏற்படுத்தி வரு கின்றனர்.

சர்வதேச தலையீடுகளுக்கு ஒரு போதும் நாம் இடமளி க்கப் போவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் அதற்கான ஒரே இடம் பாரா ளுமன்ற தெரிவுக் குழுவே ஆகும். தெரிவுக் குழுவிற்கு வந்தால் மாத்திரமே கூட்டமை ப்புடன் பேச்சுவார்த்தை நடத் துவோம். அரசாங்கத்தின் இறுதியான முடிவும் இதுவே ஆகும். இதில் ஒரு மாற்ற மும் இல்லை.

முப்பது வருட கால கொடிய யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்தமை சுலப மான விடயம் அல்ல. பல ஆயிரக்கணக்கிலான உயிர் தியாகங்களையும் இழப்பு களையும் சந்தித்தே தீவிர வாதத்தை முடிவிற்கு கொண்டு வந்தோம். எனினும் இன்று ஜெனீவா மூலம் இலங்கை க்குள் மீண்டும் தீவிரவாதம் உருவாக்கப்பட்டு வருகின் றது.

இலங்கைக்கு வெளியில் இருக்கும் விடுதலைப்புலி தீவிரவாதிகளின் உதவி யுடனும் பிரிவினைவாதக் கட்சிகளின் ஆதரவுடனும் வடக்கு கிழக்கில் மீண்டும் புலித் தீவிரவாதம் உருவாக் கப்பட்டு வருகின்றது.

வடக்கு தமிழ் மக்களை பகடைக் காய்களாக பயன படுத்தி மீண்டும் குழப்பத் தினை ஏற்படுத்த முயற்சிக்கக் கூடாது.

இன்று வடக்கில் இராணு வத்தை குறைத்தமையே விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக காரணமாக அமை ந்துள்ளது.

தமிழ் மக்களையும் இந்த நாட்டையும்காப்பாற்ற வேண்டு மாயின் வடக்கில் இராணு வததை பலப்படுத்த வேண் டும். இராணுவத்தினால் மட்டுமே வடக்கை பாதுகாக்க முடியும். அதே போல் வட க்கில் உள்ள மக்கள் இன்று இராணுவத்தினருடன் இணை ந்து வாழ்கின்றனர். எனவே அதை சாதகமாக பயன்படு த்தி தீவிரவாதத்தை அடியோடு அழித்து நாட்டையும் மக்களை யும் காப்பாற்ற வேண்டும் என வும் அவர் தெரிவித்தார்.(2)

# தேர்தலுக்காக நீதித்துறையை அவமதிக்கிறார் கருணாநிதி

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

தேர்தல் ஆதாயத்துக்காக நீதித் துறையை அவமதிக்கும் செயலில் திமுக தலைவர் கருணாநிதி ஈடுபட்டதாக, உலகத் தமிழர் பேரமைப் புத் தலைவர் பழ.நெடுமாறன குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியி டடுள்ள அறிக்கையில் தெரி வித்துள்ளதாவது,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட 7 பேர் தொடர்பான வழக்கில் ஏப்ரல் 25ஆம் திகதிக்குள் தீர்ப்பு வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் கூறியிரு ப்பது நீதிமன்ற மரபுகளுக்கு உகந்தது அல்ல. அரசியல் ரீதியான விளைவுகள் இதனால் ஏற்படும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

உச்சநீதிமன்றத்தலைமை நீதிபதியையே மிரட்டும் வகை யில் கருணாநிதி கூறியிருப் பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

7 பேரின் வழக்கில் தீர்ப்பு வெளிவருவதை விட, தனது கட்சியின் நலனே பெரிது என்று கருதுகிறார்.

இவருடைய தேர்தல் ஆதா யத்துக்காக அந்தத்தீர்ப்பை ஒத்தி வைக்க வேண்டுமென நிர்ப் பந்தம் செய்வது நீதித் துறை யை அவமதிக்கும் போக்காகும் என்றுபழநெடுமாறன்என்றார்.(2)

# வெலிக்கடை வைத்தியசாலையில் குண்டு தயாரிக்கும் பொருட்கள் மீட்பு

வெலிக்கடைச் சிறைச் சாலையின் வைத்தியசாலை யில் இருந்து குண்டு தயாரி க்கப் பயன்படும் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை வைத்திய சாலையின் கபேட் ஒன்றில் இருந்தே இந்த இரும்புக் குண் டுகள் தயாரிக்க பயன்படும் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு கிலோ கிராம் எடையுடைய இரு ம்புக் குண்டுகள் தயாரிக்கக் கூடிய பொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 17ஆம் திகதி வெலி க்கடைச் சிறைச்சாலையிலி ருந்து இரண்டு கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட தேடுதல் வேட் டையின்போதே சிறைச்சாலை யின் வைத்தியசாலையில் குண்டு தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன், இது தொடர்பி லான விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. (2)

# மரண அறிவித்தல்

## செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம்



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமா கவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம் அவர்கள் 18.04.2014 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சிற்றம்பலம் வள்ளி யம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், இரா சலெட்சுமி, அமரர் Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்த ராஜா, அருள்கந்தராஜ்ன், நவநீதராஜன் ஆகி யோரின் அன்புச் சகோதரியும், அமரர் சண்முக லிங்கம் மற்றும் Dr. மைத்திரிதேவி, மரகத வல்லி, Dr. ஸ்ரீகாந்தா, பாலசுப்பிரமணியம், இந்திராணி, சோமாவதி ஆகியோரின்மைத்துனியும், சுபோதினி, சுபேந்திரன், Dr. வினோதினி, நந்தினி, பாலகஸ்தூரி, இளங்கீரன் ஆகியோரின் அன்புச் சித்தியும், அனுஷா, Dr. சிவாணி, சிவசங்கர், பவதாரணி, பிரதீபன், அபிராமி, Dr.சஞ்சீவன், சரண்யா, மைத்திரி, திவ்வியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.04.2014 இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலி ருந்து பிற்பகல் 5 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு 23.04.2014 நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஈமக்கிரியை கள் நடைபெற்று 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கிறோம்.

3/1, பம்பலப்பிட்டி
தொடர்மாடி
கொழும்பு - 04

(6178)

தகவல்
சிற்றம்பலம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்


...சிறிது யோசித்த உமை, தன் பக்கத்திலிருந்த அழகில் சிறந்த மருள் மாயை, இருள்மாயை என்னும் இரு பெண்களையும் அழைத்து, "பெண்களே, இப்பொழுதே நீங்கள் இருவரும் பூலோகத்திலுள்ள சதுரகிரியின் தெற்கிலுள்ள பிரம்ம முனிவரின் வனத்துக்குச் சென்று அங்கு பிரம்ம முனிவரும், கோரக்கரும் இயற்றி வரும் யாக குண்டத்தில் தோன்றி, யாகத்தின் பலனாக அவர்கள் பெறும் பேறாகிய கற்ப மூலிகைகளாகி அவர்களுக்கு நித்திய வாழ்வைக் கொடுக்கும் பொருட்டு உங்கள் மாயா வினோத சௌந்தரிய முக வசீகரத்தால் அவர்களை வழிப்படுத்துங்கள்" என்று கூறி அனுப்பினாள்.

உமையின் ஆணைப்படியே அந்த மாய மங்கையர் இருவரும் சித்தர்கள் வளர்த்த யாகத்தீயிலிருந்து வெளிப்பட்டனர்.

தாங்கள் வளர்த்த வேள்வித் தீயிலிருந்து, பார்வதி சமேதராக பரமேஸ்வரன் தோன்றி தாங்கள் கோரிய வரங்களை அளிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், அவர்கள் வராமல் திடுதிப்பென்று இரு அழகிய பெண்கள் வெளிவந்தது கண்டு, இரண்டு சித்தர்களும் திகைத்துத்தான் போனார்கள்.

வேள்விக்கு விருந்தினர்களாக வந்த தேவர்களும் முனிவர்களும் அந்த மங்கையர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக வருண பகவானும், அக்கினி பகவானும் ஏன் நைஷ்டிக பிரம்மச்சாரி என்று போற்றப்பட்ட நாரத முனிவரும்கூட அப்பெண்களின் அழகை விழிகளால் அள்ளிப் பருகிக் கொண்டிருந்தனர்.

ஆகா! என்ன ஒரு பேரழகு, பிரம்மா தன் படைப்பின் திறமையெல்லாம் ஒன்று திரட்டி இப்பொழுதுதான் புதிதாகப் படைத்து பூலோகத்திற்கு அனுப்பி அதன் முடிவு என்ன என்று அறிய காத்திருக்கிறாரோ! இமையோரின் விழி இமைகள் வானுலகில் மட்டுமல்ல, பூவுலகிலும் இமைக்க மறந்தன. வாய், அவர்கள் அழகை அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தன. இதயமோ இயங்க மறந்த நிலையில் அனைவரும் உணர்வற்று மதிமயங்கி இருந்தனர்.



நடுக்காட்டு விநாயகர்

இந்த இரு பெண்களின் வருகையால் அந்தத் தவச் சாலையின் புனிதத் தன்மையே கெட்டுவிட்டதைக் கண்ட இரு சித்தர்களும் புலனடக்கம் பெற்ற தேவர்களும் மகரிஷிகளும் இப்பெண்களின் அழகைக் கண்டு அளவில்லாத மோகத்தை அடைந்தார்களென்றால் உலக மானிடர் கண்டால் மனம் கலங்காதிருப்பாரோ? ஆதலால் இந்த இரு பெண்களையும் நாம் சபித்துவிட வேண்டும் என்று எண்ணுகையில்,

## ஆன்மீகம் 99

"மகா சித்தர்களே! நாங்கள் தேவலோகப் பெண்கள். இறைவனின் ஆணைப்படி உங்களை மகிழ்விக்கவே இருவரும் இவ் வேள்வித் தீயில் தோன்றினோமேயன்றி உங்கள் யாகத்தை குலைக்க அல்ல" என்று இரு பெண்களும் சித்தர்களை வணங்கினர்.

"தேவலோகப் பெண்களே! எங்கள் யாகத்தின் நோக்கம் அழகிற் சிறந்த உங்களை அடைவதன்று, துறவிகளான எங்களுக்கு நீங்கள் தேவையுமில்லை."

உங்களுக்கு நாங்கள் தேவையில்லை என்பதால் எங்களைச் சபிக்கப் போகிறீர்களா? தங்கள் எண்ணத்தை ஏற்கிறோம். உங்கள் மனம்போல ஆகட்டும். அப்படி எங்களுக்குச் சாபமளிப்பதானால் தயவுசெய்து அந்த சாபத்தால் எங்களுக்கு மேன்மை கிடைக்கும்படிச் செய்யுங்கள்.

அக்கினியும் வருணனும் பதறினர். சாபமா? வேண்டாம் சித்தர்களே, யாகத் தீயிலிருந்து தோன்றிய இப் பெண்களை நாங்கள் விரும்பிய நிலை கண்டும் எதற்காக அவர்களைச் சபிக்கப் போகிறீர்கள்.

உங்களுக்கு அவர்கள் தேவையில்லை என்பதற்காக அவர்களை அழிப்பது எந்த விதத்தில் நியாயம்? அவர்களின் தேவைக்காக நாங்கள் காத்திருக்கிறோமே, எங்களுக்குத் தானமாகக் கொடுத்துவிடக் கூடாதா?

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

18

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் எழும்பூரில் வந்திறங்கிய போது எப்படியும் பார்த்தாக வேண்டும் என்று நான் எழுதி வைத்திருந்த பெயர்களுள் உங்கள் பெயரும் ஒன்று.

ஆனால் உங்களோடு காற்றைத் தவிர எல்லோரும் கடிதத் தொடர்பு மட்டுமே வைத்துக்கொள்ள முடியும் என்று உங்கள் அலுவலகக் கதவுகள் அறிவித்தபோது, பறந்து வந்த பட்டாம் பூச்சி நான், மீண்டும் கூட்டுப் புழுவானேன்.

ஆனாலும் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத இந்த விக்கிரமாதித்தன் உங்களைச் சந்திப்பதற்காய்ப் பதினான்கு ஆண்டுகள் காத்திருந்தேன்.

உங்கள் மீது எனக்குப் பாசமில்லை; பக்தியில்லை.

உங்கள் மீது ஒரு மதிப்பு; உங்கள் அறிவின் மீது ஒரு வியப்பு. இரண்டும் தவிர வேறில்லை.

நீங்கள் நிகழ்த்தியிருப்பது எத்தனை பெரிய சாதனை!

இலட்சக்கணக்கான தமிழர்களின் வாரத்தின் ஒரு நாளை எத்தனை வருஷமாய் எழுதி வாங்கி விட்டீர்கள்!


உங்களை நான் இரண்டாம் முறை சந்தித்தபோது சொன்ன மாதிரியே உங்களோடு எனக்கு முரண்பாடுகள் உண்டு.

நீங்கள் பழைமையின் ஜாதகமா? புதுமையின் கம்பூட்டரா என்ற குழப்பங்கள் எனக்குள் கொடுகட்டுவதுண்டு.

இலக்கியத்தில்-தத்துவங்களில்- கலாசார மதிப்பீடுகளில்- ரசனைகளில்- அரசியல் சமூகப் பார்வைகளில் உங்களோடு என்னால் ஓடிவர முடியாது தான்.

ஆயினும்... ஆயினும்... சமுத்திரமாய்ப் பொங்கும் உங்கள் அறிவைப் பார்த்துக் கரையில் நின்று கைதட்டிக் கொள்கிறேன்.

எத்தனை அறிவு! எத்தனை விரைவு!



## எஸ்.ஏ.பி.அண்ணாமலை

எத்தனை தாகம்! எத்தனை தேடல்!

உங்களை நினைக்கும் போது, உறங்கும்போதுகூட வாசிக்க ஏதாவது உத்தி வைத்திருக்கிறீர்களோ என்று தோன்றும் எனக்கு.

உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் இன்று காலையில் தடை செய்யப்பட்ட ஒரு புத்தகத்தை நேற்றுப் படுக்கைக்குப் போகும் முன்பே படித்திருப்பீர்கள்.

ஒரு கிரிக்கெட் பந்தின் கனம்- பூமி உருண்டையின் விட்டம்- லெபனான் கலவரம்- வெண்பா இலக்கணம்- கொசுவின் ஆயுள்- சூரியனின் வயது- மாங்காயின் எந்த பாகத்திற்கு உப்பு, எந்த பாகத்திற்கு மிளகாய்த் தூள்- மந்திரிகளுக்கே தெரியாத மந்திரிகளின் இலாகாக்கள்- நடிகைளுக்கே தெரியாத நடிகைகளின் தந்தைமார்கள்- எல்லாம் தெரியும் உங்களுக்கு.

அது எப்படியோ தெரியவில்லை! உலக உருண்டை உங்கள் மேஜையில் வந்து ஒவ்வொரு நாளும் சுற்றி விட்டுப் போகிறது.

உலகத்தின் எல்லா நதிகளும் உங்கள் நாற்காலியின் இடைவெளிகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் காற்று உங்களுக்குக் காலை வணக்கமும் காதோடு சில செய்திகளும் சொல்லிவிட்டே போகிறது.

உங்கள் மீது நான் கொண்ட மதிப்புக்குக் காரணம் உங்கள் அறிவு; வியப்புக்குக் காரணம் உங்கள் முடிபு.

ஒரு பத்திரிகையாளனுக்கு முகம் வேண்டியதில்லை என்று முடிவு செய்தீர்களே! அந்த முடிபு.

முகம் இல்லாததே என் முகவரி என்று மெய்ப்பித்துக் காட்டினீர்களே! அந்தத் துணிவு.

விலாசம் வேண்டும்; ஆனால் விளம்பரம் வேண்டியதில்லை என்பது எவ்வளவு பெரிய குணம்.



காற்றுகூட கிளைகளை அசைத்துத் தன் இருப்பைச் சொல்லிக் கொண்டே போகிறது.

சமுத்திரம் கூட தன் அலைகளை அனுப்பி சகஸ்ரநாமம் பாடிக் கொள்கிறது.

நட்சத்திரங்கள் கூட மினுக்கி மினுக்கி தூரங்களைத் துடைக்கப் பார்க்கின்றன.

இந்த நூற்றாண்டின் விரைந்த வாழ்க்கையில் எந்திர சப்தங்களுக்கு மத்தியில் தங்கள் சப்தம் மூழ்கிவிடக் கூடாது என்று பல மனிதர்கள் மரணப்படுக்கையில்கூடக் கத்திக் கொண்டே கிடக்கும் ஒரு காலகட்டத்தில்- போலி விளம்பரங்களை ஒரு புன்னகையால் தூக்கியெறிந்து விட்டு ஓரமாய் ஒதுங்கி உற்சாகமாய் இருக்கிறீர்கள்.

உங்கள் முடிபு நன்று.

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## வைஜெயந்தி எடுத்த முடிவு

மன்னர் நரேந்திரவர்மரின் ஒரே செல்வப் புதல்வியான வைஜெயந்தி தன் சிறு வயதிலேயே தாயை இழந்தபிறகு, அவளை மன்னர் மிகவும் கண்ணும் கருத்துமாய் வளர்த்தார். எந்த ஒரு விடயத்திலும் அவள் மனம் கோணாதவாறு அவள் விரும்பியவாறே நடந்து வந்தார். இயற்கையிலேயே மிக அழகான வைஜெயந்தி, திருமணப் பருவத்தை எட்டினாள்.

ஒருநாள், வைஜெயந்தி தன் தோழிகளுடன் மலைமீதிருந்த ராஜேஸ்வரி கோயிலுக்குச் சென்றாள். தரிசனம் முடிந்தபிறகு தோழிகள் கோயிலை விட்டு வெளியேறி மலையிலிருந்து இறங்க, வைஜெயந்தி கோயிலைப் பிரதட்சிணமாகச் சுற்றி வந்தாள்.


அப்போது கோயிலின் பின்புறம் ஒரு சிற்பி பாறையில் செதுக்கிக் கொண்டிருந்த சிற்பம் அவளை மிகவும் கவர்ந்தது. "மிக அழகான சிற்பம்!" என்று அவள் பாராட்ட அந்த சிற்பி அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"நான் இளவரசி வைஜெயந்தி!" என்று அவள் கூறியதும், அவன் அவளைத் தலைகுனிந்து வணங்கி, "வணக்கம் தேவி! என் பெயர் விஜயன்!" என்றான்.

"நீங்கள் என்னுடைய உருவத்தையும் சிலையாக வடிப்பீர்களா?" என்று வைஜெயந்தி கேட்டாள். "அதை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன் தேவி! உங்கள் சிற்பத்தை பளிங்கில் செதுக்கித் தருகிறேன்.

ஆனால் அதற்கு ஒரு மாதம் ஆகும். வாரத்தில் ஒரு நாள் நீங்கள் என் முன் ஒரு மணி நேரம் வந்து அமர வேண்டும்," என்றான் விஜயன். "ஆகட்டும்! கட்டாயம் வருகிறேன்! ஆனால் இந்த விடயம் நமக்குள் ரகசியமாக இருக்கட்டும்!" என்றாள்.

அதற்கு விஜயன், "தேவி! அதோ, மலையின் கீழ் தெரிகிறதே ஒரு குடிசை! அதுதான் என் வீடு! தயவு செய்து நீங்கள் அங்கே வந்து விடுங்கள்! என்னுடைய பாட்டியும், நானும் மட்டும் அங்கிருக்கிறோம்!" என்றான். அதற்கு வைஜெயந்தி "ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ராஜேஸ்வரி கோயிலுக்கு வருவது என் வழக்கம். இங்கு தேவியை தரிசனம் செய்த பிறகு, தனியாக உங்கள் வீட்டிற்கு வருகிறேன்!" என்றாள்.



பிறகு, மலையிலிருந்து கீழிறங்கி மற்ற தோழிகளுடன் சேர்ந்து கொண்டு வீடு திரும்பினாள். அடுத்த வெள்ளிக்கிழமை, தான் மட்டும் தனியாக வந்து ராஜேஸ்வரியை தரிசனம் செய்து முடித்த பின், அவள் விஜயனின் இல்லம் அடைந்தாள்.

அவளைக் கண்டதும் விஜயன் அவளை மிகுந்த உற்சாகத்துடன்வரவேற்றான். அங்கிருந்த மரத்தின் கிளைகளில் மலர்ந்திருந்த ஒரு மலரைப் பறிக்கும் விதமாக அவளை ஒயிலாக நிறக வைத்து, அதைப் பளிங்குக் கல்லில் ஓவியமாக முதலில் வரைந்து கொண்டான். பிறகு, அவளை பளிங்குக் கலலில் செதுக்கத் தொடங்கினான். அதற்குள் விஜயனின் பாட்டி அவளுக்கு ஒரு பணியாரம் தந்து உபசரித்தாள்.

அத்தனை சுவையான பணியாரத்தை வைஜெயந்தி அரண்மனையில் கூட அது நாள் வரை உண்டதில்லை. "பாட்டி! இத்தனை ருசியான பணியாரம். நான் இது வரை சுவைத்ததேயில்லை!" என்று தன் மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தினாள். அதைக் கேட்டு பாட்டி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை தோறும் வைஜெயந்தி விஜயனின் வீட்டிற்கு வந்தாள். விஜயன் தன் திறமை அனைத்தையும் ஈடுபடுத்தி மிகச் சிறப்பாக மூன்றே வாரங்களில் சிலையை பெரும்பாலும் செதுக்கி விட்டான். வைஜெயந்தி தன்னுடைய அழகான பளிங்குச் சிலையைவிட, விஜயனின் கம்பீரமான அழகையும், குணத்தையும் மிகவும் ரசித்தாள். அவள் பலவிதமான கனவுகளுடன் அரண்மனைக்குத் திரும்பினாள்.

மறுநாள் காலை, வைஜெயந்தி நந்தவனத்தில் ஒரு ரோஜாப்பூவைப் பறித்துக் கொண்டிருக்கையில், "அந்த ரோஜாவை விட நீ மிகவும் அழகாயிருக்கிறாய் வைஜெயந்தி!" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்ப, அங்கே ஒரு இளவரசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அப்போது தான், முதல் நாள் இரவு தன் தந்தை தன்னிடம் பக்கத்து நாட்டு இளவரசன் தங்கள அரண்மனைக்கு விருந்தினனாக வந்திருப்பதை அறிவித்தது நினைவிற்கு வந்தது.

"உங்கள் வரவு நல்வரவாகுக!" என்று சொல்லிவிட்டு, வைஜெயந்தி உடனே அந்தப் புரம் திரும்பி விட்டாள். அன்றிரவு அவள் தந்தை, "வைஜெயந்தி! உன்னை அந்த இளவரசன் ஜெயந்தன் நந்தவனத்தில் பார்த்தான் அல்லவா! உன்னை அவன் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்... (தொடரும்)




- 1500 - பிரேசிலைக் கண்ட முதல் ஐரோப்பியர் போரத்துக்கீசரான பேதுரோ கப்ரால்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெஞ்சமின் கிரியெர்சன் தலைமையில் நடு மிசிசிப்பியைத் தாக்கினர்.
- 1889 - நடுப் பகலில் பல்லாயிரக் கணக்கானோர் காணிகளைக் கைப்பற்றுவதற்காக ஓடினார்கள். சில மணி நேரங்களில் ஐக்கிய அமெரிக்காவில் ஓக்லஹோமா நகரம் மற்றும் கத்ரி (Guthrie) ஆகியவற்றில் 10,000 பேர் அங்கிருந்த வெற்றுக் காணிகளைக் கைப்பற்றிக் குடியேறினர்.
- 1898 - அமெரிக்க கடற்படையினர் கியூபாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டு ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.
- 1912 - ரஷ்யாவின் பொதுவுடமைக் கட்சியின் பத்திரிகை ப்ராவ்டா சென் பீட்டர்ஸ்பேர்க் இலிருந்து வெளிவர ஆரம்பித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஈப்ர (Ypres) ஜேர்மனி முதன் முதலாக குளோரீன் வாயுவை வேதியியல் ஆயுதமாகப் பாவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் நியூ கினியின் ஒல்லாந்தியா என்ற இடத்தில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: குரோவேசியாவில் ஜசெனோவாச் வதை முகாம் கைதிகள் சிறையுடைப்பில் ஈடுபட்டபோது 520 கைதிகள் கொல்லப்பட்டனர். 80 பேர் தப்பியோடினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் பெர்லினில் எபெர்ஸ்வால்ட் நகரை இலகுவாகக் கைப்பற்றியதைக் கேள்வியுற்ற ஹிட்லர தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.
- 1970 - முதலாவது பூமிதினம் கொண்டாடப்பட்டது.
- 1983 - ஹிட்லரின் நாட்குறிப்புகள் கிழக்கு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டதாக டேர் ஸ்டேர்ன் என்ற ஜேர்மனிய இதழ் அறிவித்தது.
- 1997 - அல்ஜீரியாவில் கெமிஸ்ரி என்ற இடத்தில் 93 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1997 - பெருவின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் 126 நாட்களாகப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த 71 பேர் அரசுப் படைகளின் தாக்குதலின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
- 2000 - ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.
- 2006 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1724 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த தத்துவவியலாளர் (இ. 1804)
- **1870 - விளாடிமிர் லெனின், ரஷ்யப் புரட்சியாளர், லெனினிசம் என்ற கோட்பாட்டின் நிறுவுனர (இ. 1924)**
- 1876 - றொபேர்ட் பாரானி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1936)
- 1909 - ரீட்டா லெவி-மொண்டால்சினி, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர்
- 1919 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 2001)
- 1940 - க. சட்டநாதன், ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர்

### இறப்புகள்

- 1994 - ரிச்சார்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்காவின 37ஆவது ஜனாதிபதி (பி. 1913)
- 2013 - லால்குடி ஜெயராமன் வயலின் மேதை (பி.1930)

### சிறப்பு நாள்

- பூமிதினம்

### விளாடிமிர் லெனின்



விளாடிமிர் லெனின் 22 ஏப்ரல் 1870 இல் ரஷ்யாவில் வால்கா நதியின் கரையோரம் உள்ள சிம்பிர்ஸ்க் எனும் நகரத்தில் பிறந்தார்.

இவருடைய இயற்பெயர் விளாடிமிர் இலீச் உல்யானவ் என்பதாகும்.

தொழிலாளர் விடுதலை இயக்கம் என்பதை தொடங்கி ரஷ்யாவில் தொழிலாளர்களிடையே காரல் மார்க்ஸின் கொள்கைகளை பரப்புரை செய்தார்.

ரஷ்யாவில் பொதுவுடமை ஆட்சியை நிறுவுவதற்குக் காரணமாக இருந்த முக்கிய அரசியல் தலைவர் லெனின் ஆவார்.

ரஷ்யாவில் பொதுவுடமை அரசை நிறுவுவதற்குக் கண்ணுங் கருத்துமாகப் பாடுபட்டார். 1917 நவம்பர் முதற்கொண்டு உலகெங்கும் பொதுவுடமை ஆட்சி தொடர்ந்து விரிவடைந்து வந்தது. .

லெனின் புரட்சி இயக்கங்களை நிறுவுவதில் மிகுந்த அனுபவம் உடையவர். ஒரு நாட்டுக்கு உகந்த முறைகளைப் பிற நாடுகளுக்கும் பயன்படுத்துவதை வன்மையாக எதிர்த்தவர். நாட்டுக்கும் உலகத்துக்கும் ஏற்ற முறையில் புரட்சி இயக்கங்களை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான கொள்கை உடையவர்.

அவர் புரட்சி நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். வன்முறை இன்றியமையாதது என்று அவர் வலியுறுத்தி வந்தார். "வர்க்கப் போராட்டத்தில் ஒரு சிக்கல் கூட வன்முறையின்றி தீர்க்கப்பட்டதாக வரலாறே இல்லை!" என்று அவர் வலியுறுத்தினார். "தொழிலாளர் சர்வாதிகாரம்" பற்றி மார்க்ஸ் இங்குமங்கும்தான் குறிப்பிட்டுள்ளார். ஆனால், லெனின் இந்தக் கோட்பாட்டைத் தீவிர வெறியுடன் பின்பற்றினார். "தொழிலாளர் சர்வாதிகாரம் என்பது வன்முறையின் அடிப்படையில் அமைந்த அதிகாரமேயன்றி வேறில்லை. அந்த அதிகாரத்தை சட்டத்தினாலோ, ஆட்சியினாலோ கட்டுப்படுத்த முடியாதது" என்று அவர் நம்பினார்.

அவருக்குத் திசு தடித்தல் என்னும் நோய் முற்றியது. பேச முடியாத நிலையும் ஏற்பட்டது. டிசெம்பரில் இவரது வலக்கையும் செயல் இழந்தது. அது முதல் முற்றிலும் செயலற்ற நிலையிலேயே இருந்த லெனின் தனது 54-ஆம் வயதில் 1924-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் திகதி மூளை நரம்பு வெடித்து மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜய" வருட ராசிபலன்கள்

## ஜூன் 13 இற்கு மேல் சுகங்களும், சந்தோஷங்களும் கூடும் !

சிவல்புரி சிங்காரம்

## மீனம்





**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**ஜூன் 13 இற்கு மேல் சுகங்களும், சந்தோஷங்களும் கூடும்!**
**தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து சமுதாயத்தில் புகழோடு வாழும் மீன இராசிநேயர்களே!**

விஜய வருடம் முடிந்து ஜய வருடம் தொடங்குகிறது. வருடம் தொடங்கும் பொழுதே வக்ர நிவர்த்தியாகி வியாழன் சஞ்சரிப்பது யோகம்தான். 2,9 க்கு அதிபதி செவ்வாயும், பஞ்சம ஸ்தானாதிபதி சந்திரனும் இணைந்து உங்கள் இராசியைப் பார்த்தபடி அர்த்த நட்சத்திரத்தில் புத்தாண்டு பிறந்திருக்கிறது.

அஷ்டமத்து சனியும் வக்ரம் பெற்றிருக்கிறார். அப்புறமென்ன புத்தாண்டு பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப் போகிறது. மண்,மனை சேர்க்கை, மக்கள் செல்வங்களின் கல்யாண வாய்ப்பு, தொழில் நிலைய திறப்பு விழா என்று ஒவ்வொரு காரியமாக நடைபெற்று உள்ளத்தில் மகிழ்ச்சியை வழங்கும்.

**யோகங்கள்**

சந்திர மங்கள யோகம் இருப்பதால் குடும்பத்தில் ஆண்டு முழுவதும் சுப விரயம் அதிகரிக்கும். அப்படிச் செலவானாலும் கூட அதற்கு ஏற்ற விதத்தில் வரவு வந்து கொண்டேயிருக்கும். புத்தாண்டு தொடக்க நாளில் புதன் நீச்சம் பெறுகிறார். 4,7இற்கு அதிபதியும் நீச்சம் பெறுகிறார்.

கேந்திராதிபத்ய கிரகம் நீச்சம் பெறும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். பணிகளிலிருந்த தொய்வு அகலும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் கை கூடினாலும், ஒரு சில காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம். குறிப்பாக மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு தரும் தகவல் வந்து சேரலாம்.

உங்கள் இராசிநாதன் குரு. ஆனால், அதற்கு பகை கிரகமான சுக்ரன் களத்திர காரகன் என்பதால் பொருத்தம் பார்த்து திருமணம் செய்வது நல்லது.

இரண்டில் கேது இருப்பதால் வாக்கு கொடுக்கும் முன் ஒருகணம் யோசிப்பது நல்லது. பார்க்கும் தொழிலில் படபடப்பும் பரபரப்பும் கூடும். நாட்பட்ட நோய்கள் உடலிலிருந்து அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது.

சூரியன் நீச்சம் பெறுவதால் தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடி சிலருக்கு மாற்றம் வரலாம்.

பொறுமையைக் கடைப்பிடித்து பெருமை அடைய வேண்டிய விதத்திலேயே குருப் பெயர்ச்சி வரை கிரகங்களின் இயக்கம் இருக்கிறது. பொதுவாக உங்கள் ஜாதகத்தைப் புத்தாண்டு ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இராசிநாதனின் சஞ்சாரம், அதைப் பார்க்கும் கிரகம், அதோடு இணைந்து சஞ்சரிக்கும் கிரகம், வருடத் தொடக்கம் முதல் வருடக் கடைசி வரை உலா வரும் கிரகங்களின் உன்னத மாற்றம் இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, புது முயற்சிகளில் நாம் ஈடுபடுவது நல்லது.

**எப்படியிருக்கும் இந்த ஜய வருடம்?**

நவக்கிரகங்களில் புத்திரகாரகன் என்று போற்றப்படுகின்ற குருதான் உங்கள் இராசிநாதனாக விளங்குகிறார். அவர் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். எனவே, ஆரோக்கியத்தையும், தொழில் வளத்தையும் அவர்தான் உங்களுக்கு வழங்க வேண்டும். அப்படிப்பட்ட குரு வக்ரம் பெறும் பொழுதெல்லாம் வசதி வாய்ப்புகள் பெருகுவதில் தடைகள் ஏற்படும். ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல்கள் ஏற்படும்.

அந்த குரு பகவான் வருடத் தொடக்கத்தின்போது வக்ர நிவர்த்தியாகிவிட்டார். ஆனால், அஷ்டமத்தில் வீற்றிருக்கும் சனியும் இரண்டு, ஒன்பதுக்கு அதிபதியான செவ்வாயும், வக்ர இயக்கத்தோடு சஞ்சரிக்கிறார்கள். எனவே, சொத்துப்பிரச்சினைகள் தலை தூக்கும். சொந்தங்களின் பகை அதிகரிக்கும்.

ஆடம்பரப்பொருட்களை வாங்குவதிலும் சொத்துக்களை சேர்ப்பதிலும் கவனம் செலுத்துவதன் மூலமும் கடன் தொல்லைக்கு ஆளாக நேரிடும். எட்டில் ராகுவும்9 இல் கேதுவும் சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கம் அதிகமாகவே இருக்கும்.

உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்பவர்களோடு கூடுதல் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. சூரிய- கேது சேர்க்கையோடும், சனி- இராகு சேர்க்கையோடும் பிறக்கும் இந்தப் புத்தாண்டு குருப் பெயர்ச்சி வரை கூடுதல் கவனத்தோடு இருப்பது நல்லது.

குருவின் பார்வை பதியும் எட்டாமிடம் புனிதமடைவதால் இழப்புகளை எல்லாம் ஈடுசெய்வீர்கள். வாங்கல்- கொடுக்கல்கள் ஒழுங்காகும். புத்தை பார்க்கும் குருவாலே முத்தான வாழ்க்கை அமையும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பழைய தொழில்களை மூட்டை கட்டிவிட்டு புதிய தொழில் தொடங்க,வாய்ப்புகள் உருவாகும். 12 ஆம் இடத்தைப் பார்க்கும் குருவால் பயணங்கள் அதிகரிக்கும். பொதுவாகவே சாதகமான கிரகங்களாக இருக்குமேயானால் அவற்றின் வக்ர காலங்களில் வழிபாடுகள் அவசியம் தேவை. வக்ர நிவர்த்தி ஆகிவிட்டால் அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட அதிக லாபம் கிடைக்கும்.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21:06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும் மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். வருடக் கடைசி வரை அங்கேயே இருக்கிறார்கள். இதன் விளைவாக எண்ணற்ற மாற்றங்கள் வந்துசேரப்போகிறது.

ஜென்ம இராசியில் கேதுவும் 7 ஆம் இடத்தில் ராகுவும் சஞ்சரிக்கப்போவதால் இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் உருவாகும் வாய்ப்பு தானாகவே வந்து சேரும்.

தெசாபுத்தி பலம்பெற்று இருந்தாலும் நாடு மாற்றங்களைக் கூட நீங்கள் மேற்கொள்ளலாம். ஜென்ம கேதுவாக இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் உருவாகும். மாற்று மருத்துவத்தை மேற்கொண்டால் உடல்நலம் சீராகும்.

கல்வி, கலை சம்பந்தப்பட்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன் வழி ஒத்துழைப்போடு கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். பொன்னான நேரத்தில் அதிகபட்ச நேரத்தை ஆன்மிகத்திற்காக ஒதுக்கிவிடுவீர்கள்.

**அஷ்டமத்து சனி விலகும் நேரம்!**

ஜய வருடம் மார்கழி மாதம் தொடக்க நாளிலேயே சனி பகவான் உங்கள் இராசிக்கு அதிபதி ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார்கள். எட்டில் சஞ்சரித்து இது வரை இன்னல்கள் பலவும் தந்த சனிபகவான் இனி வெற்றி வாய்ப்புகளை வீடு தேடி வரவழைத்துக் கொடுக்கும் விதத்தில் இடையூறுகளைச் செய்தவர்கள் இனி விலகுவர்.

கடை திறப்பு விழாக்களும், கட்டட திறப்பு விழாக்களும் இனி கண்டு மகிழப்போகிறீர்கள். பாக்கிகள் தானாக வசூலாகும். வீடு கட்டும் முயற்சியைக் காட்டிலும் வாங்குவதே நல்லது.

மாசி 30 ஆம் திகதி முதல் வருடக் கடைசி வரை சனி வக்ரத்தில் இருப்பதால் இக்காலத்தில் எதையும் யோசித்து செய்வதே நல்லது.

**வழிபாட்டின் மூலமே நன்மையை அடைய வேண்டிய காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக்காலத்தில் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. அதிக விரயங்கள் ஏற்படலாம். உறவினர் பகை உருவாகலாம். திடீர் மாற்றங்கள் திகைக்க வைக்கும்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்**

வைகாசி 30 ஆம் திகதி (13.06.2014) அன்று கடக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதுமட்டுமல்ல அங்கு உச்சம் பெறுகிறார். இதுவரை 4 இல் சஞ்சரித்த குரு இப்பொழுது 5 இல் சஞ்சரித்து உச்ச குருவாகி அதன் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால் மெச்சும் விதத்தில் வாழ்க்கை அமையும். தொழில்களும் வாய்க்கும். கல்யாண கனவுகள் நனவாகும். கவலை என்ற மூன்றெழுத்து விலகும். கௌரவம், புகழ், அந்தஸ்து உயரும். சிக்கல்களிலிருந்து விடுபடுவீர்கள். செய்யும் செயல்களில் நண்பர் ஒத்துழைப்பாக இருப்பர்.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால்,**
**சிக்கல்கள் விலகி ஓடும்!**
**ஒன்பதைக் குருதான் பார்த்தால்,**
**உதவிகள் பலவும் கிட்டும்!**
**லாபத்தைக் குருதான் பார்த்தால்,**
**நலமுடன் வந்து சேரும்!**

என்பது ஜோதிட நியதி.

எனவே, பார்க்கும் குருவை பலப்படுத்த ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதமிருந்து குரு கவசம் பாடி, குருவை வழிபட்டு வருவது நல்லது. அதன் வக்ர காலத்தில் வளர்ச்சியில் தளர்ச்சி கூடும். வருமானத்தில் தடைகள் உருவாகும்.

**மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

குழப்பங்களைத் தீர்க்கும் குருவின் பார்வை!

ஜய வருட தொடக்கத்தில் 4 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கிறார். இது அர்த்தாஷ்டம குரு என்று அழைக்கப்படும். வைகாசி 30



இற்கு மேல் குருவின் முழுமையான பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குறைகள் தீரும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். பாசம்மிக்கவர்களின்நேசம்கூடும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை திருப்திகரமாக இருக்கும். இல்லத்தில் பிள்ளைச் செல்வம் துள்ளிவிளையாட வழிபிறக்கும். நாட்டுப்பற்று மிக்கவர் உங்கள் கூட்டு முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர். ராகு- கேது பெயர்ச்சியின் விளைவாக பயணங்கள் அதிகரிக்கும். ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். சனிப்பெயர்ச்சிக்குப் பின்னால் சங்கடங்கள் அனைத்தும் தீரும்.

**சிறப்பு வழிபாடுகள்**

**பொதுவாக இராசிநாதன் குரு என்பதால் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு தட்சிணா மூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. போராட்டமான வாழ்க்கை பூந்தோட்டமாக மாற முருகப்பெருமானை யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டு வாருங்கள்.**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியே... விதியே! தமிழச் சாதியை என்செய நினைத்தா யெனக் குரையாயோ? - பழ. நெடுமாறன்



விதியே... விதியே, தமிழச் சாதியை என்செய நினைத்தா யெனக்குரையாயோ?- என மனம் நொந்து பாரதி பாடினார. இல்ங்கை, மலேசியா, பிஜித்தீவு, தென்னாபபிரிக்கா போன்ற நாடுகளில் இரப்பர், தேயிலைத் தோட்டங்கள் அமைப்பதற்காக தமிழ்நாட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் சொல்லொண்ணாத துன்பங்களுக்கு ஆளாகி நலிவதைக் குறித்து மனம் பொறாமல் இப்பாடலை பாரதி பாடினார்.

இப்பாடலை பாரதி பாடி கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் ஆன பிறகும். பூமிப் பந்தில் வாழ்கிற தமிழர்களின் துயரங்கள் தீரவில்லை. நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறதே தவிர குறைந்தபாடில்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கையில் போர் முடிந்தவுடன் ஐ.நா. மனித உரிமை ஆணையம் சர்வதேச விசாரணையைக் கொண்டுவரவேண்டும் எனக் கூறியது. அதே ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ-மூனின் சட்ட வல்லுநர் குழு இதே கோரிக்கையை பரிந்துரைத்தது. 2010 ஜனவரியில் டப்ளின் மக்கள் தீர்ப்பாயம் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரியது. ஜேர்மன் மக்கள் தீர்ப்பாயமும் இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. இலங்கை அரசு உள்நாட்டு விசாரணையைத் தொடங்காத காரணத்தினால் ஐ.நா. விசாரணைக் குழுவை பான்-கீ-மூன் அமைத்தார். ஆனால் இக்குழுவை இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி தர இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்தார். இறுதியாக நல்லிணக்க ஆணைக குழு என்ற பெயரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்குத் தானே ஒரு குழுவை நியமித்துக் கொண்டார்.

2012ஆம் ஆண்டில் உள்நாட்டு விசாரண்ண, நல்லிணக்க ஆணையக்குழு பரிந்துரை ஆகியவற்றை செயற்படுத்துவதைக் குறித்த ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்தது. இந்தியாவின் அறிவுரையின்படி இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட தீர்வு காணப்பட வேண்டும் என திருத்தம் செய்யப்பட்டது. இத்தீர்மானத்தின்படி உள்நாட்டு விசாரணையையும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் செயற்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்தார்.

2013 ஆம் ஆண்டில் மீண்டும் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை கோரினார். அதே ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் அதை ஏற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2014 ஆம் ஆண்டில் அமெரிக்கா பிரிட்டன் உள்பட ஐ.நா. பேரவையில் அங்கம் வகிக்கும் 36 நாடுகள் ஒன்றுகூடி ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தன. அத்தீர்மானத்திற்கு ஆதரவாக 23 நாடுகள் வாக்களித்தன. 12 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா உட்பட 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

நீர்த்துப்போக வைக்கப்பட்ட இத்தீர்மானததையும் ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார் என்பது முக்கியமானது.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் தென்னாசியாவில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசுகள் தொடர்ந்து மேற்கொண்டு வந்த இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை சர்வதேச சமுதாயம் தடுத்து நிறுத்த முன்வரவில்லை. கொடிய குற்றங்களில் ஈடுபட்ட சிங்கள அரசுகள் தண்டனைகளிலிருந்து தப்பியதோடு, தங்குதடையின்றித் தொடர்ந்தார்கள். தமிழர்களுக்கு எதிரான தங்களது கொடூரமான செயல்களை கடந்த 66 ஆண்டுகாலமாக சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்த இந்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு இத்தீர்மானம் முதற்தடவையாக முற்றுப் புள்ளி வைக்க முயற்சி செய்கிறது.

வரைவுத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தபடி வடகிழக்கில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்ற பகுதி இந்தியாவின் அழுத்தம் காரணமாக நீக்கப்பட்டுவிட்டது. இதன்மூலம் சர்வதேச விசாரணை என்பது பல சிக்கல்களை சந்திக்க நேரும். வீதி தோறும் இராணுவம் முகாமிட்டிருக்கும் போது அதற்கு எதிராக சாட்சியம் அளிக்க யாரும் முன்வரமாட்டார்கள். இதன் விளைவாக இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்குப் பதில் அப்பிரச்சினையை மேலும் அதிகமாக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

தனது பிராந்திய நலன்களுக்கு உட்பட்ட நாடான இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுத்து நிறுத்தாததோடு சிங்கள அரசின் செயல்களுக்கு துணை போன இந்திய அரசை இனியும் நம்புவதால் எந்தப் பயனும் இல்லை என தமிழர்கள் முடிவுக்கு வந்தனர். தமிழர் வரலாற்றில் மிக நெருக்கடியான காலக் கட்டத்தில் அவர்களுக்குத் துணை நிற்க வேண்டிய இந்தியா நேர்மாறாகச் செயற்பட்டதின் காரணமாக வேறு நாடுகளின் ஆதர்வைத் தேடி தமிழர்கள் செல்ல வேண்டிய நிலை உருவானது. தமிழர்களின் எதிர்காலத்திற்கும் தென்னாசியாவின் எதிர்கால அரசியலுக்கும் உத்திரவாதம் தரும் நாடுகளாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்கு நாடுகள் முன் வந்ததற்கு இந்தியா செய்த தவறே காரணமாகும்.

தென் ஆசியாவில் உள்ள பர்மா, திபெத், இலங்கை போன்ற நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் காவலாக இருக்க வேண்டிய இந்தியா தனது வரலாற்றுக் கடமைகள், பூகோள ரீதியான முதன்மை, உள்ளார்ந்த அரசியல் எல்லாவற்றிற்கும் மேலாக மனச்சாட்சி ஆகியவற்றைப் புறக்கணித்துத் தூக்கி எறிந்த இந்திய அரசு இவ்வாறே தொடர்ந்து செயற்பட்டு வந்திருக்கிறது.

சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற நாடுகளின் எதிர்ப்புக்கிடையே அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தின் விளைவாக இந்தியா முற்றிலுமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் முன்மொழியப்பட்ட நிலையிலேயே அதைத் தடுத்து நிறுத்த பாகிஸ்தான் கடும் முயற்சி செய்தது. இலங்கையில் ஜனநாயகமும், ஜனநாயக அமைப்புகளும் இத்தீர்மானத்தின் மூலம் புறக்கணிக்கப்படுவதாக பாகிஸ்தான் கூறியது: அதுமட்டும் அல்ல. இத் தீர்மானத்தின்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான நிதி வசதி மனித உரிமை ஆணையத்திடம் இல்லை என பாகிஸ்தான் வாதாடியது. ஆனால் அவை எடுபடவில்லை. உடனடியாக சீனா தலையிட்டு இத்தீர்மானம் குறித்து விவாதிப்பதை ஒத்திவைக்கும்படி கோரியது. இவ்விரு நாடுகளும் இலங்கை அரசுடன் எப்போதும் ஒத்துழைக்கிற நாடுகள். ஆனால், இந்நாடுகளுடன் கியூபா சேர்ந்துகொண்டது வியப்பளித்தது. அமெரிக்காவுக்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் கியூபா இத்தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்த காரணத்தினால் எதிர்த்து வாக்களித்தது. இறுதியாக சர்வதேசப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என இத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்ததை தடுத்து நிறுத்த சீனா, பாகிஸ்தான், கியூபா ஆகிய நாடுகள் இணைந்து பெருமுயற்சி செய்தன.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த நோர்வே செய்த முயற்சிகளை தகர்த்த இந்தியா இப்போதும் சர்வதேச புலன் விசாரணையைத் தடுத்து நிறுத்த எல்லா வகையிலும் முயன்றதின் மூலம் இலங்கையுடன்தான் இந்தியா இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டு ள்ளது.

அண்மையில் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் "இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் நடைபெற்ற இராணுவத்தின் அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நடுநிலையான விசாரணை நடைபெற ஒரு குழுவை நியமிக்க அனைத்து நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தும்" என கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கை வெளிவந்தவுடனேயே சிங்கள அரசு எச்சரிக்கையாகி இந்தியாவை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

கடந்த இருமுறை அமெரிக்கத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்தது. எனவே இம்முறை அவ்வாறு செய்வதிலிருந்து இந்தியாவைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சில இரகசியங்களை சிங்கள அரசு அம்பலப்படுத்தியது. தன்னுடன் இந்தியா சிறந்த முறையில் இராணுவ ஒத்துழைப்பை வைத்துள்ளதாக உலகத்திற்கு உணர்த்தும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் இலங்கைக்கு அரசுமுறைப் பயணமாக சென்ற இந்திய இராணுவ தென் பிராந்தியத் தளபதி அசோக் சிங், இந்தியக் கடற்படை தலைமைத் தளபதி டி.கே.தோஷி ஆகியோர் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பு சம்பந்தமான புகைப்படங்களையும் இன்னும் அதிகமான சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் பயிற்சி அளிக்க இந்தியா அளித்த வாக்குறுதியையும் இலங்கை அரசு தன்னுடைய வலைத் தளங்களில் வெளியிட்டு அம்பலப்படுத்தியது. அதுமட்டுமல்ல தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் காணாமற் போனவர்கள் குறித்து நடத்தும் விசாரணையை இந்திய அமைதிப் படை இருந்த காலத்திலிருந்தே அதாவது 1987 முதல் 2009 வரையிலான காலம் வரை விசாரணை நடத்த வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆணை பிறப்பித்தார்.

இலங்கையில் சிங்கள இராணுவம் தமிழர்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதையும் 1,40,0000 அப்பாவி மக்களைப் படுகொலை செய்ததையும், 1,46,000த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு கொண்டுபோகப்பட்டவர்கள் கதி இதுவரை தெரியாத நிலையும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டு இன்னமும் புகலிடம் இல்லாமல் தவிக்கும் நிலையும் தமிழர்களுக்கு எதிரான அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இராணுவம் தொடர்ந்து கடைப்பிடித்துவரும் பாலியல் வன்முறைகளையும், தமிழர்களின் நிலங்களைப் பறித்து சிங்களர்களைக் குடியேற்றுவதும் இன்னமும் தொடர்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சிங்கள அரசுக்கு எதிரான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை தடுத்து நிறுத்த இந்தியா செய்த முயற்சி உலகத்தில் இந்தியாவின் மதிப்பை எந்த அளவுக்குக் குறைத்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க டில்லி மறந்துவிட்டது.

இந்திய வெளியுறவுத் துறையில் உள்ள ஒரு சிறு கும்பலே இதற்குக் காரணம் என்பது அம்பலமாகியிருக்கிறது. இந்தியாவின் நிதியமைச்சராக இருக்கக்கூடிய ப.சிதம்பரம் அண்மையில் அளித்த நேர்காணலில் "ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. தீர்மானத்தை ஆதரிக்க வேண்டாம் என்ற முடிவு மத்திய அமைச்சரவையின் முடிவு அல்ல. அது வெளியுறவுத் துறையின் முடிவு" என்று கூறியிருக்கிறார்.

வெளியுறவுத்துறையின் செயலாளரான சுஜாதாசிங் "இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் அமெரிக்கத் தீர்மானம் அமைந்திருந்ததால் இந்தியா ஆதரிக்கவில்லை" என்று கூறியிருக்கிறார். அப்படியானால் பாகிஸ்தானின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கும் வகையில் இந்திய இராணுவத்தை அனுப்பி வங்கதேச விடுதலைக்கு இந்தியா உதவியதும் தவறாகிவிடும். நேரு, இந்திரா ஆட்சிக் காலங்களில் இந்திய அரசு என்ன செய்தது என்பதையே சற்றும் தெரிந்து கொள்ளாதவர்கள் முக்கிய பொறுப்புகளில் இருப்பது காலம் செய்த கோலம்தான்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற தீர்மானம் முதலமைச்சரால் முன்மொழியப்பட்டு அனைத்துக்கட்சிகளாலும் ஆதரிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்திற்கு எதிராக இந்திய அரசு செயற்பட்டிருப்பதன் மூலம் இந்தியாவின் கூட்டாட்சி முறை பெரும் கேள்விக்குள்ளாகியிருக்கிறது. தமிழக சட்டமன்றத் தீர்மானத்திற்குப் புறம்பாக இந்திய அரசு நடந்துகொண்ட முறை ஏற்கனவே புண்ணாகிப்போன தமிழர்களின் நெஞ்சங்களில் வேலைச் செருகுவது போன்றதாகும். இந்தியாவில் வாழும் ஏழரைக் கோடி தமிழ் மக்களின் ஒருமித்தக் கோரிக்கையைவிட ஒன்றேகால் கோடி சிங்களரை சர்வதேச விசாரணையிலிருந்து காப்பதே முக்கியமானது என இந்திய அரசு உறுதிகொண்டிருப்பது அம்பலமாகியிருக்கிறது.

போர்க் குற்றவாளிகள், சர்வதேச மனித உரிமைகளையும் சட்டங்களையும் அப்பட்டமாக மீறுகிற மனித சமுதாயத்தின் பகைவர்கள், தங்களின் பாலியல் வெறிக்கு ஒட்டுமொத்தத் தமிழ்ப் பெண்களை இரையாக்கி வருபவர்கள் ஆகியோரைப் பாதுகாப்பதுதான் தனது தேசிய நலன்களுக்கு உகந் தது என இந்தியா நினைக்குமானால், அது தேசத்தந்தையான காந்தியடிகளுக்கு இழைக்கப்படுகின்ற துரோகமாகும்.

இந்தியாவின் போரைத்தான் தாங்கள் நடத்தினோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய சகோதரர்களும் திரும்பத் திரும்ப கூறிவருவதை மத்திய அரசோ அல்லது வெளியுறவுத்துறையோ ஒரு போதும மறுக்கவில்லை. தமிழர் நெஞ்சங்களில் இவையெல்லாம் புகைந்துகொண்டிருக்கிறது. வரப்போகிற நாடாளுமன்றத் தேர்தலில் இதற்குரிய தண்டனையை காங்கிரஸ் கட்சிக்கு தமிழர்கள் அளிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் கடலில் மீன்பிடிக்க பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்படவில்லை

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் கடலில் மீன்பிடிக்கச் செல்ல மீண்டும் பாஸ்முறை நடைமுறைக்கு கொண்டு வரப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

அவை வதந்திகள் மாத்திரமேயென கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சும் மீன்பிடித் திணைக்களமும் இதுகுறித்த யோசனைகளைக் கூட முன்வைக்காத நிலையில் நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வகையிலேயே மேற்படி புரளி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சின் உத்தியோகபூர்வ, பேச்சாளர் நரேந்திர ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதுகுறித்து மன்னார் மாவட்ட மீனவ சம்மேளனத் தலைவர் ஜஸ்டின் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்கு எவ்வித பாஸ் முறைமையும் நடைமுறைப்படுத்தவில்லையெனவும் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு பாஸ் முறையை அமுல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையெனவும் அவர் உறுதியாகக் கூறினார்.

மன்னார் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல மீண்டும் பாஸ் முறை நடைமுறைக்கு கொண்டு வரப்படுவதாக வெளியான தவறான செய்தியைத் தொடர்ந்து தமது வாழ்வாதாரத் தொழில் பாதிப்படைந்து விடுமென மன்னார் மாவட்ட மீனவர்கள் கடும் அதிர்ச்சியும் அச்சமுமகொண்டுள்ளனர்.

மீனவர்களுக்கான பாஸ் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லையெனவும் பாஸ் இல்லாமலேயே மீனவர்கள் கடலுக்குச் செல்லலாமென்றும் கடற்படைப் பேச்சாளரும் அமைச்சின் பேச்சாளரும் மன்னார் மாவட்ட சம்மேளனத் தலைவரும் சுட்டிக் காட்டியுள்ள அதேநேரம் வதந்திகள் குறித்து மீனவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் வலியுறுத்தினார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாஸ் முறையை மீண்டும் அறிமுகப்படுத்துவது குறித்த யோசனையை கடற்படை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சோ திணைக்களமோ இதுகுறித்த எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையெனவும் நரேந்திர தெரிவித்தார். (2)



பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு அண்மையில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது இரத்ததானம் செய்பவர்களை படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

## போலி நாணய தாள்கள் மீட்பு

கடந்த ஆண்டில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு மில்லியன் நாணயத்தாள்களுக்கு ஆறு போலி நாணயத்தாள் என்ற ரீதியில் போலி நாணயத் தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டிலும் இதே விதமான போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டிருந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

போலிநாணயத்தாள்களை அடையாளம் காணும் வகையிலான கருவிகளை அனைத்து வங்கிகள் மற்றும் வணிக நிதி நிறுவனங்களும் பயன்படுத்த வேண்டுமென மத்திய வங்கி ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட எம்.பிக்களுக்கு உரிமையுண்டு-மனோ

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகமும் மத்தள விமான நிலையமும் ஒரு குடும்பத்திற்கு சொந்தமானதல்ல என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அறிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு.

அண்மையில் மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த இரண்டு அபிவிருத்தித் திட்டங்களும் மக்களுக்கு மேலும் சுமையாக அமையுமே தவிர, நன்மைகள் ஏற்படாது என ஏற்கனவே வலியுறுத்தப்பட்டு வந்ததாகவும், தாக்குதல்கள் மூலம் இந்த கருத்து நிரூபணமாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையை மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்ற காரணத்தினால் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடரபில் பார்வையிடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பூரண உரிமையுண்டு.

மக்கள் பிரதிநிதிகளின் உரிமை கள் மீறப்பட்டமை குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரியிருந்தேன்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



எடுக்கப்பட வேண்டும்.

அம்பாந்தோட்டை மேயர் இராஜ் பெர்னாண்டோ அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (2)

# இன்று ஒரு தகவல்

## மூச்சு

ஒருவர் அசையாமல் படுத்திருக்கிறார்.

அவர் இருக்கிறாரா? போய்விட்டாரா? என்பதை எப்படி முடிவு செய்கிறோம். மூச்சு வருகிறதா? இல்லையா? என்பதைக் கண்டு பிடிப்பதற்கு அவர் மூக்குக்கு முன்னால் புறங்கையை வைத்துப் பார்க்கிறோம்.

மூச்சு என்பது அவ்வளவு முக்கியமான ஒரு விடயம். சுவாசம் இல்லை என்றால் எதுவுமே இல்லை.

பூமி இருக்கிறதே. அது கூட சுவாசிக்கிறது என்பதை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

பூமிக்கு மேலே இருக்கிற மண் அடுக்கில் காற்றில் உள்ள ஒட்சிசன் ஒட்சி கரணமடைகிறது என்றுதான் இதுவரைக்கும் எல்லோரும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்த ஒட்சிசன் பூமிக்குள்ளே ஒரு கிலோமீற்றர் ஆழம் வரைக்கும் ஊடுருவிப் போகுறதாம்.

பூமிக்குள்ளே இரண்டு பக்கமும் பல கிலோமீற்றர் வரைக்கும் பரவுகிறதாம். பூமிக்குள்ளே இருக்கிற நீர் நிலை அடுக்குகள் தான் நுரையீரல் செய்யும் வேலையை செய்கிறதாம். நம் உடம்பில் நுரையீரல் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது.

ஒரு மரத்தை தலை கீழாகத் தொங்கப் போட்டால் எப்படி இருக்கும்: அப்படித்தான் நுரையீரலும் இருக்கும்.

வலது பக்கம் ஒன்று, இடது பக்கம் ஒன்று. வலது பக்க நுரையீரல் சற்றுப் பெரிதாக இருக்கும். நுட்பமான நரம்புக் குழாய்கள் அதில் இருக்கும்.

கோடிக்கணக்கான நுண்ணிய குழாய்களை வைத்துக் கொண்டு தான் அது வேலை செய்கிறது. 25 கோடி குழாய்கள் இருக்குமாம்.

நுரையீரல் நிறம் கருஞ்சிவப்புதான். புகை அதிகமாக உள்ளே போய்விட்டது என்றால் அது கறுப்பாகி விடும்.

காற்றில் உள்ள பிராண வாயுவை இது இழுத்து எடுத்துக் கொண்டு இரத்தத்தை சுத்தப்படுத்தும் முக்கியமான வேலையை செய்கிறது. அசுத்த காற்றை வெளியே அனுப்பிவிடுகிறது.

ஒருவர் வேகமாக ஓடி வருவார். அவருக்கு மூச்சு இரைக்கும். பயங்கரமாக எதையாவது பார்த்துவிடுகிறார். உடனே மூர்ச்சையாகிவிடுவார்.

இதுபோன்ற சமயங்களில் வேறு எந்தத் தூண்டுதலும் இல்லாமல் நுரையீரல் தானாகவே வேகமாக இயங்கும்.

இப்படி ஒரு அவசியம் ஏற்படும் போது இயக்கத்தைத் தூண்டி விடும் முக்கியமான இணைப்பு மூளைக்குக் கீழே முதுகு எலும்புக்கு மேற்பகுதியில் இருக்கிறது. அது உடனே சுவாசத்திற்கு அவசர உதவியை கொடுக்கிறது.

ஒருவர் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார். இந்த சமயத்தில் அவருக்கு ஒரு பங்கு காற்று தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் எழுந்து நடக்கும் போது ஒன்றரை மடங்கு தேவைப்படும்.

ஓடினாரென்றால் மூன்று மடங்கு தேவைப்படும். படுத்திருக்கும் போது அரை மடங்கு தான் தேவைப்படும். இதற்கு நிமிடத்துக்கு 16 தடவை மூச்சு விட்டாக வேண்டும்.

இப்படி சாதாரணமாக உள்ளே இழுக்கும் காற்று சிறிதாக இருந்தாலும், இதுபோல எட்டு மடங்கு காற்றை உள்ளே இழுத்து வைத்துக்கொள்ளும் சாமர்த்தியம் நுரையீரலுக்கு உள்ளது.

தண்ணீர், நுண்கிருமிகள், இரசாயனப்பொருள் இப்படி எது உள்ளே போனாலும் நுரையீரல் சமாளிக்கும்.

முப்பது வருடமாக விடாமல் புகைபிடிப்பவர் தொடர்ந்து உள்ளே அனுப்பி வைக்கிற புகையைக் கூட சமாளிக்கிறது என்றால் பாருங்கள்.

உள்ளே போகும் புகை நுட்பமான சுவாச முடிச்சுக்களை அழித்துவிடும். கரிப்புகை அதன் மேலே படிந்து உபயோகம் இல்லாமல் செய்து விடுகின்றது.

ஆனாலும் தேவைக்கு அதிகமாக எட்டு மடங்கு கூடுதலான சுவாச முடிச்சுக்கள் நம் உடம்பிற்குள் இருக்கிறது. அதனால் சமாளிக்க முடிகின்றது.

சமாளிக்க முடியவில்லை என்றால், சில சமயம் மூச்சுத் திணறும். அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும்.

ஆனால், அப்படி யார் விடுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இந்துக் கல்லூரி க.பொ.த. (சா/த) பரீட்சை -2013 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

2015 ஆம் ஆண்டு 125 ஆண்டு நிறைவைக் கொண்டாட இருக்கும் இந்துக் கல்லூரியின் பொதுப்பரீட்சை பெறுபேறுகள் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எம்மக்களின் கவனத்துக்கு உட்பட்டு வருகின்றது.

கணிதப் பாரம்பரியம் கொண்ட இக்கல்லூரியின் கணிதப் பெறுபேறுகள் எப்பொழுதும் நிறைவாகவே இருக்கிறது. மேலும் தமிழர் தலை நிமிர் கழகம் இதுவே என்ற கல்லூரி கீதத்தில் வரும் வாசகத்திற்கேற்ப பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் எப்போதும் உயர்வாகவே இருந்து வருகிறது.

2013 இல் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மொத்தமாக 260 பேர் தோற்றினர். இவர்களுள் தமிழ்மொழிமூலம் 199 பேரும் இருமொழி மூலம் 61 பேரும் தோற்றியிருந்தனர். பரீட்சைக்குத் தோற்றிய 260 பேரும் க.பொ.த (உ/த) கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதுடன் இவர்களுள் 257 பேர் (98.85%) விஞ்ஞான/ கணிதப் பிரிவுகளுக்குத் தகுதி பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

பரீட்சைப் பெறுபேறுகளின் சிறப்புச் சித்திகள் பின்வருமாறு,

அட்டவணை I

| தரம் | எண்ணிக்கை |
|---|---|
| 9A | 09 |
| 8A | 43 |
| 7A | 33 |
| 6A | 29 |
| 5A | 35 |

260 பரீட்சார்த்திகளுள் 149 பேர் (57.30%) 5 A க்கும் அதற்கு மேலான தரவுகளைப் பெற்று இருக்கின்றார்கள். 9 A யும் 8A யும் பெற்றவர்கள் எண்ணிக்கை 52 பேர், இது பரீட்சை எடுத்தவர்கள் தொகையில் 20 வீதமாகும்.

அட்டவணை II இல் பாட அலகுகளின் பெறுபேறுகள் தர அடிப்படையிலும் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் தரப்பட்டுள்ளன. பாட அலகுகள் அடிப்படையில பெறுபேறுகள்.

**சகல பரீட்சார்த்திகளின்**

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1259 | 50.80 |
| B | 500 | 21.87 |
| C | 439 | 18.76 |
| S | 131 | 5.60 |
| W | 11 | 0.47 |
| மொத்தபாட அலகுகள் | 2340 | 100 |

**தமிழ் மொழி பரீட்சார்த்திகளின்**

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 910 | 50.81 |
| B | 369 | 20.60 |
| C | 378 | 21.11 |
| S | 124 | 6.92 |
| W | 10 | 0.56 |
| மொத்தபாட அலகுகள் | 1791 | 100 |

**இரு மொழிப் பரீட்சார்த்திகளின்**

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 349 | 63.57 |
| B | 131 | 23.86 |
| C | 61 | 11.11 |
| S | 7 | 1.28 |
| W | 1 | 0.18 |
| மொத்தபாட அலகுகள் | 549 | 100 |

இப்பரீட்சையில் ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் ஒன்பது பாடங்கள் எடுக்க வேண்டும். பரீட்சார்த்திகள் 260X 9=2346 பாட அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர்.

மொத்தமாகத் தோற்றிய 2340 அலகுகளில் 1259 அலகுகளில் (53.80%)A சித்தி பெற்றுள்ளனர்.

A+B+C தரங்களின் கூட்டுத்தொகை 2198 ஆகவும் (93.93%) இருக்கின்றது. 11 பாட அலகுகளில் பரீட்சார்த்திகள் சித்தியடையத் தவறிவிட்டனர்.

தமிழ்மொழி பரீட்சார்த்திகளினதும் இருமொழி பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகளை ஒப்பிடும் இடத்து இரு மொழிப் பிரிவினரின் பெறுபேறுகள் உயர்வாக இருக்கின்றன.

இரு மொழிப்பிரிவினரின் பெறுபேறுகள் உயர்வாக இருக்கின்றன. இரு மொழிப்பிரிவில் கற்கும் மாணவர்களின் வீட்டுப் பின்புலம் கற்றல் செயற்பாட்டுக்கு அனுசரணையாக இருக்கிறது.

இப்பிரிவு மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தையும் ஆங்கில மொழியில் கற்றி ருப்பதுடன் 27 பேர் ஆங்கில இலக்கியத்தையும் தெரிவுப்பாடமாக எடுத்துள்ளார்கள்.

தற்பொழுது ஆங்கில மொழிமூலம் பாடங்களைக் கற்பிக்கும் ஆற்றலைப் பல ஆசிரியர்கள் கொண்டிருப்பதுவும் மாணவர்கள் ஆங்கிலத்தில் தற்துணிவுடன் கற்கும் நிலைமையைக் காணமுடிகின்றது.

அட்டவணை III இல் பாட ரீதியான பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன. சமய பாடங் களுக்குத் தோற்றிய 260 பேரில் 256 பேர் A சித்தி பெற்றிருக்கின்றார்கள். தமிழ்மொழியில் 132 பேர் A (50.7%) சித்தி பெற்றுள்ளனர்.

இப்பாடத்தில் ABC பெற்றவர்களின் கூட்டுத்தொகை 255 பேர் 98 வீதமாகும். ஆங்கிலத்தில் ABC பெற்றவர்களின் கூட் டுத்தொகை 207 (79.6%) மேலும் ஆங்கிலத்தில் சித்தி விகிதம் 97.7 வீதமாகும்.

கணித பாடத்தில் 260 பேரும் சித்தி பெற்றிருப்பதுடன் 184 பேர் (70.8%)A சித்தி பெற்றுள்ளனர். மேலும் ABC தரம் பெற்ற வர்களின் கூட்டுத் தொகை 247 பேர் 95 வீதமாகும்.

இப்பெறுபேறுகள் இப்பாடசாலையின் கணிதப் பாரம்பரியத்தை வெளிக்காட்டி நிற்கின்றது. இக்கல்லூரியில் இருந்து வருடா வருடம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்வேறு பொறியியற் கற்கைகள் கணனி கற்கைகள் மற்றும் பௌதீக விஞ்ஞான பிரிவுகளுக்கு பல்கலைக்கழகம் செல்வதுண்டு.


மேலும் சர்வதேச ரீதியாக கணிதத்துறையில் பல புகழ் பெற்ற விஞ்ஞானிகளை இக்கல்லூரி பெற்றுத் தந்துள்ளது.

வரலாற்றில் சகலரும் சித்திபெற்று இருக்கின்றார்கள். விஞ்ஞானத்தில் மூவர் சித்தியடையவில்லை.

விருப்புப் பாடங்களில் வணிகமும் கணக்கியல் கற்கைக்கு 214 பேர் தோற்றி 116 பேர் (54.2%) A சித்தி பெற்றுள்ளனர். புவியியலில் தோற்றிய 22 பேரும் C யும் அதற்கு மேலான் தரங்கள் பெற்றுள்ளன. இதுபோல குடியுரிமைக் கல்வியில் தோற்றிய 24 பேரும் அதற்கு மேலான தரங்களைப் பெற்றுள்ளனர். இரண்டாவது விருப்புப் பாடங்களான கர்நாடக சங்கீதம், சித்திரம், ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் நாடகம் அரங்கியல் என்பன ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய மாணவர்கள் யாவரும் சித்திபெற்றதுடன் பெரும்பான்மையினர் திறமான சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மூன்றாவது விருப்புப் பாடங்களான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் சுகாதாரமும் உடற்கல்வியியல் பாடங்களுக்கு தோற்றிய சகல மாணவர்களும் சித்திபெற்றிருப்பதுடன் மிகப்பெரும்பான்மையினர் மிகத்திறமான சித்திகளைப் பெற்றுள்ளனர்.

கல்லூரியில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மீத்திறன் மாணவர்கள் கற்பதால் நல்ல பெறுபேறுகள் கிடைக்கும் என்று ஒரு கருதுகோள். இவ் வருடப் பெறுபேறுகளை நோக்குமிடத்து பரீட்சைக்குத் தோற்றிய 100 வீத பரீட்சார்த்திகள் க.பொ.த உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றமை மிகவும் சிறப்பு என்றாலும், ஒப்பீட்டளவில் உயர்மட்டச் சித்திகள் கூடுதலாகக் கிடைத்திருக்க வேண்டும்.



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD. Durham
முன்னாள் துணைவேந்தர்

ஏன் அவ்வாறு கிடைக்கவில்லை என்பது சிந்திக்கப்படவேண்டியது. அர்ப்பணிப்பான அதிபர், ஆசிரியர் குழாத்தின் சேவைக்கேற்ற உயர் பெறுபேறுகளைத் தர பரீட்சார்த்திகள் தவறிவிட்டனர். கவனக் கலைப்பான்களால் அவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டனவா? பால்நிலை அடிப்படையில் 2013 க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளை நோக்கு மிடத்து இலங்கையில் பல பெண்கள் பாடசாலைகள்

உ+ம்:- கண்டி பெண் கள் உயர்தரப் பாடசாலை, கொழும்பு விசாக்கா, கொழு ம்பு தேவி பாலிக்கா மட்டக்களப்பு சென் வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப் பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வவுனியா தமிழ் மகளிர்மகா வித்தியாலயம், இந்து மகளிர் கல்லூரி வெள்ளவத்தை, சண்முக வித்தியாலயம் திருகோணமலை மற்றும் பல பிரபல பெண்கள் பாடசாலைகள் மிகச் சிறந்த பெறுபேறு களைப் பெற்றுள்ளன.

உதாரணத்திற்கு கண்டி பெண்கள் பாடசாலை பெறுபேறுகளை நோக்கி இப் பாடசாலையில் இருந்து 404 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றி அதில் 396 பேர் உயர் கல்விக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் 93 பேர்9A யும் 90 பேர் 8 A யும் 51 பேர் 7A யும் 33 பேர் 6 A யும் பெற்றுள்ளனர்.

ஆகவே பால்நிலை ரீதியாகப் பெறுபேறுகள் சமச்சீரற்று இருப்பது தேசிய ரீதியில் கவனிக்கத்தக்கது.

மேலும் தேசிய ரீதியில் யாழ். மாவட்டம் 8 ஆம் இடத்தையும் யாழ்ப்பாணம் கல்வி வலயம் 16 ஆம் இடத்தையும் வடமாகாண வலய மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. கல்வியில் முன்னிலை வகி த்த யாழ்ப்பாணம் வலயம் தேசிய மட்டத்தில் மாத்திர மல்ல மாகாண மட்டத்திலும் பின் தள்ளப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இந்துக் கல்லூரியின் பெறுபேறுகள் வருங் காலத்தில் மிகச் சிறப்பாக அமையும் என எதிர் பார்க்கின்றோம்.

பாட ரீதியான பெறுபேறுகள். அட்டவணை III

| பாடம் | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி எண்ணிக்கை | விகிதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 253 | 249 | 03 | 01 | | | 253 | 100% |
| உரோமன் கத்தோலிக்கம் | 05 | 05 | -- | -- | | | 05 | 100% |
| கிறிஸ்தவம் | 02 | 02 | -- | -- | | | 02 | 100% |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 260 | 138 | 82 | 35 | 05 | -- | 260 | 100% |
| ஆங்கிலம் | 260 | 55 | 64 | 88 | 47 | 06 | 254 | 98% |
| கணிதம் | 260 | 184 | 41 | 22 | 13 | -- | 260 | 100% |
| வரலாறு | 260 | 141 | 58 | 51 | 10 | -- | 260 | 100% |
| விஞ்ஞானம் | 260 | 118 | 62 | 60 | 17 | 03 | 257 | 99% |
| 1 ஆம் பாடத்தொகுதி | | | | | | | | |
| வர்த்தகமும் கணக்கியலும் | 214 | 116 | 48 | 37 | 11 | 01 | 213 | 99.5% |
| புவியியல் | 22 | 09 | 10 | 03 | -- | -- | 22 | 100% |
| குடியுரிமைக் கல்வி | 24 | 07 | 08 | 09 | -- | -- | 24 | 100% |
| 2 ஆம் பாடத்தொகுதி | | | | | | | | |
| கர்நாடக சங்கீதம் | 19 | 13 | 04 | 02 | -- | -- | 19 | 100% |
| சித்திரம் | 16 | -- | 02 | 10 | 04 | -- | 16 | 100% |
| ஆங்கில இலக்கியம் | 32 | 05 | 07 | 17 | 03 | -- | 32 | 100% |
| தமிழ் இலக்கியம் | 144 | 60 | 39 | 31 | 14 | -- | 144 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 49 | 06 | 20 | 22 | 01 | -- | 49 | 100% |
| 3 ஆம் பாடத்தொகுதி | | | | | | | | |
| தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் | 165 | 101 | 27 | 31 | 06 | -- | 165 | 100% |
| விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | 35 | 19 | 07 | 07 | -- | -- | 35 | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 60 | 31 | 16 | 13 | -- | -- | 60 | 100% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரி அமைச்சர்கள் சந்திரிகாவை சந்திப்பர்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் அமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை உத்தியோகபூர்வமாக சந்தித்து பேச தயாராகி வருகின்றனர்.

அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண தலைமையிலான குழுவினர் அடுத்த வாரம் முன்னாள் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள், சர்வதேச சமூகத்தினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சவால், எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள தேர்தல்கள் தொடர்பில் இதன் போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என தெரியவருகிறது.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரும், பிரதியமைச்சரும் முன்னாள ஜனாதிபதி சந்திரிகாவை அவரது ஹொரகொல்ல வளவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன், அரசாங்கத்திற்கு நெருக்கமான அதிகாரிகள் சிலரும் கண்டியில் அவரை சந்தித்து பேசியதாக தெரிகிறது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சிவபாலகுமார் மாறன்**

ஜேர்மனி Bedburg ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலகுமார் மாறன் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று முற்பகல் 11 மணிக்கு Kirche Str43,50126,Bergheim,Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



**திருமதி ஆறுமுகம் மாணிக்கம்**

மட்டுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மாணிக்கம் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி சிவயோகநாதன் ருபரத்தினேஸ்வரி**

மாதகல் விபுலானந்த வீதியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகநாதன் ருபரத்தினேஸ்வரி கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# புனித குர்ஆன் குறித்து விவாதிக்க நான் தயார்

## பொது பலசேனா அமைப்பின் செயலாளர் தெரிவிப்பு

குர்ஆன் தொடர்பாக தான் வெளியிட்ட கருத்து தொடர்பான பிரச்சினையானது பொலிஸாருக்கு செல்லும் வரை காத்திருப்பதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆன் குறித்து விவாதிக்க தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய கிழக்கில் இலங்கையின் பௌத்த தர்மம் குறித்து திரிபுபடுத்தப்பட்டு எழுதப்பட்ட புத்தகம் ஒன்று என்னிடம் உள்ளது. அந்த புத்தகத்தை நாட்டு மக்களுக்கு முன்வைக்க நான் தயாராக இருக்கின்றேன்.

என்னை குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிராமம் கிராமமாக சென்று அடிப்படைவாத மதப் பிரசாரங்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து நீதிமன்றத்தில் தகவல்களை வெளியிட போவதாகவும் அவர் கூறியுள்ளார். (2)

# ஹக்கீமை சந்தித்த அமைச்சர் குறித்து விசாரணை நடத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

மலேசியாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பௌத்த பிக்குமார் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு நாயக்க தேரர் உட்பட சில பௌத்த பிக்குகள் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர் கடந்த காலங்களில் புனித பூமி பிரதேசங்களில் உள்ள காணிகளை அந்நிய மதத்தினர் பயன்படுத்துவதற்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார.

அந்த அமைச்சர் அந்நிய மத அடிப்படைவாதிகளிடம் பணத்தை பெற்று வருகின்றாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் பிக்குகள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதம் தயார் செய்யப்பட்டு வருவதாகவும் அடுத்த இரண்டு வாரங்களில் அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிக்கு ஒருவர் கூறியுள்ளார். (2)

# வில்பத்து குடியேற்றம் சட்டவிரோத நடவடிக்கை

## பாலித ரங்கே பண்டார எம்.பி.தெரிவிப்பு

அமைச்சர் றிசாத் பதியுதீன் சம்பந்தப்பட்டுள்ள வில்பத்து விலங்குகள் சரணாலயத்தில் மேற்கொளளப்பட்டு வரும் சட்டவிரோத குடியேற்றதை பொதுபல சேனா எதிர்ப்பது நியாயமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

பொதுபல சேனா, இந்த சட்டவிரோத குடியேற்றத்தை கடுமையாக எதிர்ப்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் எந்த நாடும் விலங்குகளுக்கு ஒதுக்கப்படும் வலயங்களில் எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.

அமைச்சர் றிசாத் பதியுதீன், வில்பத்து வனத்திற்கு சேதம் ஏற்படுத்தும் வகையில் முஸ்லிம் மக்களை அங்கு குடியேற்றியுள்ளார்.

இது பாரதூரமான சட்டவிரோத நடவடிக்கை. வில்பத்து ஊடாக மன்னார் வரை வீதியொன்றை நிர்மாணிக்க தற்போதைய அரசாங்கம் இதற்கு முன்னர் அனுமதி வழங்கியிருந்தது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# நீர் வளங்களைப் பாதுகாக்காவிடின் எதிர்காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

ஆறுகள், நீரோடைகளில் மண் அகழ்ந்து எடுப்பதனால் அசுத்தமடையும் குடிநீரை பாதுகாப்பதற்காக அரசாங்கம் விரைவில் புதிய சட்ட விதிகளை அமுலாக்கவுள்ளது. இதற்கென அரசாங்கம் புதிதாக தேசிய சமூக நீர் மற்றும் இவை தொடர்பான கண்காணிப்பு திணைக்களம் ஒன்றையும் ஏற்படுத்தவுள்ளது.

இதன்மூலம் தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்பு சபை குடிநீரை போத்தல்களில் அடைக்கும் தொழில் முயற்சிகளை நேர்மையாகவும் சுத்தமாகவும் மேற்கொள்வதற்கான கடுமையான கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் என்று அறிவித்துள்ளது.

நீர்விநியோக வடிகால் அமைப்பு துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரவைக்கு பரிந்துரைத்த ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இந்தப் புதிய சட்டப்பிரமாணங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

நாட்டின் நீர் வளங்களை நாம் பாதுகாக்கா விட்டால் எதிர்காலத்தில் இலங்கையில் ஒரு பெரும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று அமைச்சர் கூறினார்.

தற்போது போத்தல்களில் குடிநீரை அடைத்து விற்பனை செய்வதில் பெரும் மோசடிகள் இடம் பெற்றுவருவது சமீபத்திய விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இதனால் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு மக்களுக்கு தீங்கிழைக்கக்கூடிய வகையில் அசுத்தமான தண்ணீரை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இத்திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுப்பதிலும் புதிய திணைக்களம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.(2)

# சுதர்சன ஹோமம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு சுதர்சன ஹோமம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு சக்கர ஆழ்வார் உற்சவம் நடைபெறும். (2)

# கலைமுகம் வெளி வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடான கலை, இலக்கிய சமூக இதழாக கலைமுகம் காலாண்டுச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இதில் புதிய வானம், புதிய சிறகுகள் எனும் தலைப்பில் சமகால இலங்கைப்பெண்ணியக்கவிதைகள் குறித்து சில பார்வைகள், அ.யேசுராசாவின் திரைஉலா மற்றும் நூல் மதிப்பீடுகள், சிறுகதைகள், கவிதைகள், புகைப்படங்கள் என்பவற்றைத் தாங்கி வெளிவந்துள்ளது. (2)


# தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையினரால் நடத்தப்படும் தந்தை செல்வா(கியூ.ஸி)வின் 37 ஆவது நினைவுப் பேருரை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அக்கட்சியின்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தேசிய பிரச்சினை அனைத்தும் அரச அதிகாரம் பற்றியதே என்ற தலைப்பில் நினைவுப்பேருரையை ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன நிகழ்த்துவார். (அ)





சைவ நெறிக் கூடம், சைவ மகாசபை, தெய்வத் தமிழ் அறக்கட்டளை ஆகியன இணைந்து நடத்தும் தமிழ் அருட்சுனைஞர் பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(பங்கள்-மானிப்பாய்செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு சந்தைக் காணியை இராணுவம் அபகரித்துள்ளது

## வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் குற்றச்சாட்டு



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக்குரிய காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தி இராணுவத்தினருக்கான நலன்புரி வாணிப நிலையத்தை அமைத்து இராணுவ பராமரிப்புக்கும் பாதுகாப்பு பணிகளுக்கும் செலவிடுவதற்காக பெருந்தொகை பணம் சம்பாதித்து வருவதாகவும் வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பொதுமக்களின் வியாபார நடவடிக்கைகளுக்குரிய பொதுச்சந்தை பயன்பாட்டுக்குரிய காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தி அதில தமது கடைகளை அமைத்து இலாபம் ஈட்டி வருவதனால் எமது மக்களின் வாழவாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் தமது வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களால் முறைப்பாடுகள் பலமுறை இவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த காணியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி பொதுமக்களின பாவனைக்கு, சந்தை வியாபார நடவடிக்கைகளுக்கு காணியை வழங்குவது தொடர்பில் மாவட்ட அரச அதிபரும், உதவி அரசாங்க அதிபரும் ஈடுபாடும் ஆர்வமும் காட்ட வேண்டுமெனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளரும், பிரதேச வாழ் மக்களும் கோருகின்றனர்.

குறித்த காணியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி பொதுமகளின் பாவனைக்கு கையளித்து, எமது மக்களின் சுய பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ, முல்லைத்தீவு மாவட்ட காணி உரிமை மீட்புக்குழுவின ஊடாக எம்மால் முடிந்தவரையான முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்றார். (9-6)




## கிளிநொச்சி பட்டதாரிகள் பதிவுகளை மேற்கொள்க

(கிளிநொச்சி)

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக பட்டப்படிப்பினை நிறைவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களை மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி தகுதி பெற்றவர்கள் பிறப்புச் சான்றிதழ், பட்டச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியினையும் நிழற்பிரதிகளுடனும் வருகை தந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிர்வாகக் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9)

## பரீட்சை வழிகாட்டல் இலவச வகுப்பு

(முல்லைத்தீவு)

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III மற்றும் கணக்காய்வு பரிசோதகர் சேவை தரம் II ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான இலவச பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இவ் இலவச பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்களை கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியம் மேற்கொள்ளவுள்ளது.

வகுப்புக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதனால் இப்போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளை பங்குகொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (9)

## விடுதலைப்புலிகளின் சந்தேக நபர் வைத்தியசாலையிலிருந்து தப்பியோட்டம் வவு. பொலிஸார் தெரிவிப்பு

(குருமன்காடு)

தமிழீழ விடுதலைப் புலி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் நேற்று முன்தினம் இரவு தப்பிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


வவுனியா குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த நபரொருவர் ஆயுதங்களை வைத்திருந்தார், கொள்ளைகளில் ஈடுபட்டார், தமிழீழ விடுதலை புலிகளுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், குறித்த நபர் கடந்த முதலாம் திகதி அல்சர் நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் இருந்த குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு தப்பியோடியுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது குறித்த நபரை பிடிப்பதற்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (9-250)

## வவுனியாவில் சட்டவிரோதமாக மாடு வெட்டியோர் அகப்பட்டனர்



(குருமன்காடு)

வவுனியா, பட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமாக மாடு வெட்டியவர்கள் பிடிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபை வருமான பரிசோதகர் இ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பட்டக்காடு பகுதியில் சட்ட விரோதமாக மாடு வெட்டப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்ற போது, அப்பகுதியிலுள்ள வீடொன்றில் மாடுவெட்டப்பட்டு அதன் இறைச்சி பாயினால் மூடப்பட்டிருந்தது. அதனை கைப்பற்றியதையடுத்து மாடு வெட்டப்பட்ட இடம் குறித்து விசாரித்தோம்.

குறித்த வீட்டு உரிமையாளர்கள் கறையான் குளம் பகுதியில் வைத்து மாட்டினை வெட்டியதாக கூறியதையடுத்து அங்கு சென்று பார்த்த வேளை வீசப்பட்ட மண்டையோடுகள், மாட்டின் கால்கள், தோல் உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளோம். சுகாதார சீர்கேடு மிக்க இடத்தில் வைத்து மாடு வெட்டப்பட்டுள்ளதுடன், கால்வாய் நோய் தாக்கம் உள்ள நிலையில் கால்நடை வைத்திய அதிகாரியினாலும் இம்மாடு பரிசோதிக்கப்படவில்லை. இதனையடுத்து குறித்த நபர்களை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளோம் என்றார். (9-250)

## கிளி.மாவட்ட இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் இளைஞர்களின் அநாகரிகச் செயல்களால் கிராம மக்களும் பெண்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இத்தகைய இளைஞர்களின் அட்டகாசம் உதயநகர், கனகபுரம், விநாயகபுரம், அம்பாள் குளம், கிருஸ்ணபுரம் போன்ற கிராமங்களிலேயே அதிகமாக காணப்படுகின்றது.

சுமார் ஒரு மாதமாக தொடரும் இச் செயற்பாட்டினால் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மது போதையில் வீதியோரங்களில் கூட்டமாக நிற்கும் இவ் இளைஞர்கள் பாடசாலைகளுக்கும் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் செல்லும் மாணவிகளை தொடர்ந்து செல்வதும் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும் அநாகரிகமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு இன்னுமொரு இளைஞர் குழு தம்மை அடையாளங் காண்பிக்காத வகையில் முகத்தை மூடிய தலைக்கவசங்களை அணிந்த படி மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கி வீதிகளில் நின்று, கல்வி பயிலச் செல்லும் மாணவிகள் வரும் சமயம் பார்த்து அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் நேற்று அம்பாள் குளம் துர்க்கை அம்மன் கோவிலடியிலும் நேற்று முன்தினம் அம்பாள் குளம் மயிலை மடத்தடியிலும் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் கிராமத்தவர்களினால் சிலர் அடையாளங் காணப்பட்ட நிலையில் பெயர் விபரங்களும் பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (9-271)

## எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(பூநகரி)

பூநகரி கோட்டத்தினால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு,

**பிரிவு 05**
**இலக்கணப்போட்டி**

த.ஜெலானி(கிளி/வேரவில் ம.வி) ஜெ.விதுசா(கிளி/முழங்காவில் ம.வி) ஜெ.தர்சிகா(கிளி/கறுக்காய்த்தீவு ம.வி)

**பிரிவு 05**
**திறனாய்வுப்போட்டி**

நிதர்சன்(கிளி/பூநகரி மத்திய கல்லூரி), கு.திலக்சனா(கிளி/வேரவில் ம.வி),யோ.தர்சனன்(கிளி/முழங்காவில் ம.வி).

**பிரிவு 04**
**குறுநாடக ஆக்கம்**

வி.நிம்சி(கிளி/ஜெயபுரம் ம.வி), கு.குபேசாந்(கிளி/முழங்காவில் ம.வி), சி.சரண்யா(கிளி/நல்லூர் ம்.வி).

**பிரிவு 05**
**குறுநாடக ஆக்கம்**

ர.றினுஜா(கிளி/வேரவில் இ.ம.வி), உ.நிறோஜா(கிளி/நல்லூர் ம.வி), ஞா.கிருஷிகா (கிளி/பூநகரி மத்திய கல்லூரி).

**பிரிவு -05**
**கவிதை ஆக்கம்**

ந.யாழினி(கிளி/முழங்காவில் ம.வி), யோ.மேரிஜென்சி(கிளி/நல்லூர் ம.வி), கி.சர்மிலா(கிளி/வேரவில் இ.ம.வி).

**பிரிவு 04**
**கவிதை ஆக்கம்**

அ.மகிழினி(கிளி/ஜெயபுரம் ம.வி), யோ.அனுசா(கிளி/முழங்காவில்ம.வி), சி.தேனுசன்(கிளி/பூநகரிமத்தியகல்லூரி.

**பிரிவு 04**
**சிறுகதை ஆக்கம்**

சி.மெல்கி(கிளி/முழங்காவில்ம.வி), வி.பவித்திரா(கிளி/ஜெயபுரம் ம.வி), ஜெ.விதுர்சனா(கிளி/விக்கினேஸ்வரா வித்தி.

**பிரிவு 05**
**சிறுகதை ஆக்கம்**

வி.சரண்யா(கிளி/பூநகரி மத்திய கல்லூரி), ஜெ.தர்மிகா(கிளி/முழங்காவில்ம.வி), ச.கஸ்தூரி (கிளி/வேரவில் இ.ம.வி). (9-84) (முற்றும்)



முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களுக்கு சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினரால் புத்தகங்களும் சப்பாத்துக்களும் அண்மையில் வழங்கப்பட்ட போது... (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைக்கொத்து அரிசி அன்னதானம்
விடியவிடிய மேளதாளம்
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கந்தறுத்து காவடி எடுக்கவைத்த இந்திய வீட்டுத்திட்டம்

ஒருவரைக் கெடுக்க வேண்டும் என்றால் பழைய கார் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று சொல்வார்கள். அந்தளவுக்குப் பழையகார் ஆளை உலைத்துப்போடும் என்பது அதன் பொருள்.

இப்போது அந்தக்கருத்தை மாற்றி வறுமைக் கோட்டுக்குட்பட்டவரை படு ஏழையாக மாற்றுவதாக இருந்தால், இந்திய வீட்டுத்திட்டம் கொடுக்கவேண்டும் என்று சொல்லலாம்.

அந்தளவிற்கு இந்திய வீட்டுத்திட்டம் எங்கள் மக்களை கந்தறுத்து காவடி எடுக்க வைத்து விட்டது. யுத்தத்தின் பின்பான மீள்குடியேற்ற திட்டத்தின்கீழ் தெரிந்தெடுத்தவர்களுக்கு வீட்டுத் திட்டம் கொடுப்பதாக இருந்தால், வீட்டை முழுமையாகக் கட்டிக்கொடுக்க வேண்டும்.

அப்போது தான் வீடு கிடைக்கப்பெற்றவர் அடிப்படைவசதியைப்பெற்று தனது வாழ்வியலுக்கான உழைப்பில் நிம்மதியாக ஈடுபடமுடியும்.

ஆனால் வழங்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டமானது, பயனாளிகளின் நிதிப்பங்களிப்பும் உடல் உழைப்பும் இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்பட, வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள் அறாவட்டிக்குக் கடன்பெற்று கிடைத்த நிதியுதவியுடன் வீட்டைக்கட்டி முடிக்கத் தலைப்பட்டனர்.

வீட்டைக் கட்டிமுடிப்பதற்கென மதிக்கப்பட்ட தொகையைவிட மேலதிகமாக நிதித்தேவை என்ற நிலையிலும் வீட்டுத்திட்டம் கிடைக்கப் பெற்றவர்கள் தாங்க முடியாத கஷ்டத்திற்கு ஆளாகினர்.

ஐயா! அட்டமத்துச் சனி இந்திய வீட்டுத்திட்டம் என்ற பெயரில் எங்களைப்பிடித்துப் படாப்பாடு படுத்துகிறதென்று முணுமுணுக்காதவர்கள் இல்லையென்று சொல்லும் அளவில் நிலைமை உள்ளது.

யுத்தத்தின் பாதிப்பால் சொத்திழந்து, சொந்த மண்ணிழந்து, தொழிலிழந்து, தொழில் செய்ய உதவிய உடைமையிழந்து அடிப்படைத்தேவைக்காக ஏங்கி நிற்கின்ற வடபுலத்து மக்களுக்கு அவர்களிடம் எந்த உதவியையும் எதிர்பாராமல் புதிய வீட்டைக் கட்டிக்கொடுத்திருக்க வேண்டும். கட்டிட நிர்மாணக் கம்பனிகளுடன் ஒப்பந்தம் செய்து அந்த நிறுவனங்களூடாக வீட்டை அமைத்து அதனைப் பயனாளிகளிடம் கையளித்தல் என்ற நடைமுறையே பொருத்துடையதாகும்.

ஆனால், இங்கோ நாளாந்த சீவனோபாயத் திற்கே வழியில்லை என்றிருக்கக் கூடிய ஏழைகளிடம் நீங்களும் நிதிப்பங்களிப்பு செய்யுங்கள் என்றால் நிலைமை என்னாவது?

ஆக, இந்திய வீட்டுத்திட்டம் கிடைத்தவர்கள் அதி கூடிய வட்டிக்கு கடன்பெற்றனர். இருந்த கால், அரைப்பவுண் நகைகளையும் அடைவு வைத்தனர். வட்டிகட்ட முடியாமல் தவித்தனர். கட்டப்படும் புதிய வீட்டின் காணி உறுதியை அடமானம் வைத்தனர். அந்தோ! இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் கட்டிய வீடும் இருந்த காணியும் வட்டிக்கும் முதலுக்குமாக அர்ப்பணம் செய்யப்படும். என்னசெய்வது?

ஏழைகளின் வறுமை நிலையை உணர்ந்து கொள்ளாதவர்கள் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து எடுக்கின்ற தீர்மானம் உதவியென்ற பெயரில் பெரும் உபத்திரமாகிவிடுகிறது. இதில் இந்திய வீட்டுத்திட்டமும் ஒன்று.

# பாதிக்கப்பட்ட மக்களை புறந்தள்ளுவதாக அரசாங்கத்தின் கொள்கைகள் உள்ளன

## வடக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தேசியக் கொள்கைகளும் அரசாங்கக் கட்டுப்பாடுகளும் வடமாகாணத்தல் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் வாழ்க்கை முறைகளையும் கருத்தில் எடுத்துச் செயற்படுவதாக அமையவில்லை என வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி. வக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம முதன் முறையாக நேற்றுக் காலை 21 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைத்தலைவராக நான் பங்குபற்றும் முதற் கூட்டமிது. இங்கு வந்திருக்கும் அனைவரையும் உளமார வரவேற்று எனது நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் யாவர் மனதிலும் ஒரு கேள்வி எழக்கூடும். அதாவது சுமார் ஆறு மாதங்கள் பதவியில் இருந்த பின்னர் நான் ஏன் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றேன் என்ற கேள்வி. என்னைத் தேர்தலில தேர்நதெடுத்த என் மக்களுக்கும், உங்களுக்கும் இப் பங்குபற்றலுக்கான காரணத்தை எடுத்துரைப்பது எனது கடமை என்று எண்ணுகின்றேன்.

நாம் தேர்தலில் வென்ற சில வாரங்களினுள் எமக்கொன்று புலப்பட்டது. இன்றைய தேசியக் கொள்கைகளும் அரசாங்கக் கட்டுப்பாடுகளும் வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின தேவைகளையும்அபிலாஷைகளையும் வாழ்க்கை முறைகளையுங் கருத்தில் எடுத்துச் செயற்படுவதாக அமையவில்லை என்பதே அது.

அரசாங்கத்தின் கொள்கைகள் ஆளும கட்சியின் நலன்களையும் அதன சில முக்கிய பிரமுகர்களின் நலன்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத சில அலுவலர்களின் நலன்களையும் முன் வைத்தே அமைந்திருப்பதையும் நாம் உணர்ந்தோம்.

மத்திய அரசாங்க ஆளும் கட்சி தருவதை மாகாண மக்கள் ஏற்றே தீர வேண்டும் என்ற பாணியில்தான் நடவடிக்கைகள் சென்று கொண்டிருப்பதை அவதானித்தோம்.

எம்மைப் பொறுத்தவரையில் இந் நிலையை எவ்வாறு கணிக்கின்றோம், நோக்குகின்றோம் என்பதை அண்மையில் "துரித மாகாண அபிவிருத்தி முன்னேற்றத்தின் மார்க்கம்" என்ற பொருளில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் கூட்டப்பட்ட தேசிய கருத்தரங்கத்தின் முன்னிலையில் எடுத்தியம்பியிருக்கின்றேன்.

அதில் அரசாங்கத்தின் நலன்களுககு முரணற்ற முறையில், ஆனால் மக்களுக்குப் பயனுள்ள விதத்தில் எவ்வாறு முன் செல்ல முடியும் என்று குறிப்படும் போது பின்வருமாறு கூறியிருந்தேன் "அபிவிருத்தியின் போது அனைவரையும் உள்ளடக்கக் கூடிய அர்ப்பணிப்பு நிறைந்த ஓர் அணுகுமுறை, பொது மக்களின் விசேட தேவைகள், சுதந்திரம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளிடையே ஒரு சம நிலையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியமை போனறவை இன்றியமையாததாவன" என்று ஆங்கிலத்தில் அமைந்த அவ் உரையின் ஆங்கில, தமிழ், சிங்கள மொழிப் பிரதிகள் ஒரே கைநூலாக வெளி யிடப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம திகதியிடப்பட்ட அதாவது ஜனாதிபதியின் பிறந்தநாளை திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று அவரிடமிருந்து கிடைக்கப் பெற்றேன்.

அதில் அவர் மாவட்ட ஒருங்கிணைப்புக குழுக கூட்டத்திற்கு நான் இணைத்தலைவராகத் தலைமை தாங்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

மேலும் இம்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது வருங்காலம் சம்பந்தமான மஹிந்த சிந்தனையை நிறை பெறச் செய்யத் தயாரிக்கப்பட்ட 2013 தொடக்கம் 2016 வரையிலான மாவட்ட தர மத்திம கால முதலீட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து, நடைமுறைப்படுத்தி, ஆற்றுப்படுத்திக் கண்காணிப்பதற்காக அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும உருவாக்கப்பட்டதை நடைமுறைப்படுத்தவே நியமிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

மேலும் ஒரு விடயம் இங்கு கூறப்பட வேண்டும். 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்திய இலங்கை - இந்திய இணக்கப்பாட்டு ஆவணம் கையெழுத்திடப்பட்ட போது சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது (asymmetrical power sharing) வடகிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே முன் வைக்கப்பட்டது.

மற்றைய மாகாணங்களின் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டல்ல. ஆனால் முனனாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பலைகள் உருவாகக் கூடுமென நினைத்து முழு நாட்டுக்கும் 13-வது திருத்தச் சட்டத்தை அமுல் படுதத்ப் போவதாக இந்தியாவிற்கு அறிவித்தார்.

இதன் காரணத்தால் வடக்குக் கிழக்கிற்குக் கிடைக்க வேண்டிய சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது கவனத்திற்கு எடுக்கப் படாமலே போயுள்ளது.

தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதாக்கி மத்திய அரசாங்கத்தின் கீழ் சகல அதிகாரங்களையும் உள்ளிழுக்கவே நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகக் காணக் கூடியதாக உள்ளது.

இதற்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட திவிநெகும சட்டம் சான்று பகர்கின்றது. மாகாணசபைகளின் சுதந்திரத்திலும் அதிகாரங்களிலும் கைவைப்பதாகவே மேற்படிச் சட்டம் அமைந்துள்ளது.

ஆகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பாட்டை இப்பேர்ப்பட்ட ஒரு எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே நாம் காண்கின்றோம்.

அதாவது மத்திய அரசாங்கத்தின் கை மாகாண சபையின் நடவடிக்கைகளில் மேலோங்கும வண்ணமாகவே ஜனாதிபதி செயலணி, மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகத் தெரிகின்றது. அதாவது தேர்தலில் வாக்களித்த பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்களையும் தற்போதைய பலங்குன்றிய சட்டங்கள அவர்களுக்கு அளித்திருக்கும் சொற்ப உரிமைகளையும், அதிகாரங்களையும் சீரழிக்கும் வண்ணமாகவே இவ்விரு செயறபாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக நாங்கள் காண்கின்றோம்.

மேலும் வடமாகாணத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த, வரும் செயற்றிட்டங்களும், திடட அமுலாக்கங்களும் வடமாகாண சபையின் கருத்தொருமித்தல் இல்லாது அவசர அவசரமாகக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதந் தொடககம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதையும் அச்சத்துடன் அவதானிக்கின்றோம்.

இநதப் பின்னணியில்தான் இதுவரை நாங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றாது இருந்து வந்தோம். அதுபற்றி அரசாங்கம் எம்மை விமர்சிக்கவுந் தவறவில்லை. ஆனால் விசித்திரமாக மன்னார், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நாங்கள் வருவதாக அறிவித்ததும் இருமுறை அக்குழுக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

என்றாலும் மக்கள் ஆக்ஞையைப் புறக கணிக்காது நாங்கள் வடமாகாண சபையின் நிர்வாகச் செயற்பாட்டில் உள்ளிடுவது அவசியம் என்று கருதி தற்பொழுது எமது முடிவை மாற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டங்களில் பங்குபற்ற முனவந்துள்ளோம்.

இப்பேர்ப்பட்ட நடவடிக்கை ஊடாக எமககுப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தேசியக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தவும் மறு ஆய்வு செய்யவும், அவற்றின் தாக்கங்களைக குறைக்கவும் நாம் எண்ணியுள்ளோம். எமக்கு எம் மக்களின் போரின பின்னரான தேவைகளும், முன்னுரிமை களுமே மிக முக்கியமானவையாகத் தோன்றுகின்றன. அவற்றை முன்னிறுத்தவும், முடித்துக் கொடுக்கவுமே எம்மை ஜனநாயக ரீதியில் மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்புக்களை வீணடிக்காது எவ்வளவுதான் மத்திய அரசாங்கம் தனது முகவர்களின் ஊடாக வடமாகாண மக்களின் நலன்களுக்கு எதிராக நடக்க எத்தனிப்பினும் அவற்றை முறியடிப்பதற்கே நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். மாறாக மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அரசாங்கம் நடந்து கொண்டால் அவற்றிற்கு உறுதுணையாக இயங்கவும் நாங்கள் பின்நிற்க மாட்டோம்.

ஆனால் அண்மையில் ஒரு விடயத்தை அவதானித்துள்ளோம். ஜெனிவாப் பிரேரணை அலசி ஆராயப்பட்ட போதே அதனைக் காணக் கூடியதாக இருந்தது. அதாவது அரசாங்கம் தற்பொழுது வட மாகாணத்தில் அவசர அவசரமாகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முன்வந்துள்ளது.

நான் ஐக்கிய நாடுகள் சபை நிரந்தர வதிவாளருடன் எமது மக்களின் தேவைகள் பற்றிய கணிப்பு நடத்த வேண்டும் என்று கேட்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வந்த போது அரசாங்கம் தானாகவே உள் நுழைந்து அதுபற்றிய ஒரு உடன்பாட்டில் ஐ.நாவுடன் கைச்சாத்திட்டுள்ளது. ஆகவே எமது வடமாகாண சபை இதுவரையில் என்ன செய்தது என்று கேட்போருக்கு இரண்டு பதில்கள் கூறுகின்றேன்.

எமது ஒவ்வொரு அமைச்சும் கடந்த ஆறு மாதங்கள் செய்த வேலைகளைக் கைநநூல்களாக வெளியிடுகின்றன. அதே நேரதத்தில் இன்னொன்று கூற விரும்புகின்றேன்.

நாங்கள் பதவியில் இருந்தால் மட்டும் போதும் எங்கே தம்மையும் தம் சகாக்களையும் அடுத்த தேர்தலில் மக்கள் ஓரங்கட்டி விடுவார்களோ என்ற பயத்தில் அரசாங்கம நாம் செய்ய வேண்டிய வேலைகளைத் தாமே இழுத்துப் போட்டுக கொண்டு செயலாற்றத் துணிந்துள்ளது.

யார் நெல்லைக் குற்றினாலும் நெல் அரிசியாக வேண்டும். எமது மக்களின் விமோசனமே எமக்கு முக்கியம் என்று கூறி எனது சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## தவறுகளையும் வாழ்த்துங்கள்



✡ மனதில் தூய்மையான எண்ணங்களை மட்டும் அனுமதியுங்கள். நல்ல செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். தீய விடயங்கள் தலைகாட்டாதபடி இருப்பதற்கு இது ஒன்றே வழி.

✡ பகை, பொறாமை ஆகியவற்றை வெளியிட்டால், வட்டியும் முதலுமாக புறப்பட்ட இடத்திற்கே திரும்பி விடும்.

✡ நல்லவனாக இருங்கள். பிறருக்கு நன்மை தரும் செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். ஆன்மீக வாழ்வில் உயர்வதற்கான வழி இது மட்டுமே.

✡ பண்டைக்காலத்தில் வாழ்விற்குரிய விதியாக தியாகம் கருதப்பட்டது. இனி வரப்போகும் பலகோடி நூற்றாண்டு காலத்திற்கும் இந்த விதி பொருந்தும்.

✡ செய்த தவறுகளை வாழ்த்துங்கள். அவை, உங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.

✡ எது நல்லதென்று மனதிற்குப் படுகிறதோ அதை மட்டுமே செயற்படுத்துங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய

# அமரர்.ப.சச்சிதானந்தம் ஞாபகார்த்த கிரிக்கெட்; குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்









கொக்குவில் வராகி அம்மன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி குருநகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுகழகம் சம்பியனாகியது.

கொகுக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அமரர் ப.சச்சிதானந்தத்தின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட 9 பேர் 8 பந்து பரிமாற்றங்களை கொண்ட மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் கோண்டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் வராகி அம்மன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்துகொண்டனர்.

இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குருநகர் கார்மேல்போய்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அவ் அணி 8 பந்து பரிமாற்றத்தின் முடிவில் 54 ஓட்டங்களை பெற்றது. இதில் பவீன் தமது அணிக்காக இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 20 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

55 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் வராகி அம்மன் அணி 32 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.

இதில் அலன் 2 பந்து பரிமாற்றத்தினை வீசி 8 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளை கைப்பறறினார்.

இதன் மூலம் கொக்குவில் வராகி அம்மன் அணியை வீழ்த்தி குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியனாகியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் அலன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகனாக கார்மேல்போய்ஸ் அணியின் அஜன் தெரிவு செய்யப்பட்டார். (க-23)

உடுவில் பிரதேச இளைஞர் கழக

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; ஞானமுருகன் இளைஞர் சம்பியன்







உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உதைபந்தாட்டத்தில் ஞானமுருகன் இளைஞர் கழகம் சம்பியனாகியது. உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமான ஆண்களுக்கான உதைபந்தாடப் போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றன. இப் போட்டியில் ஞானகலா இளைஞர் கழக அணியும் ஞானமுருகன் இளைஞர் கழக அணியும் மோதின.

இப் போட்டியில் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் இளைஞர் கழக அணி போட்டி ஆரம்பித்து சிறிது நேரத்தில் கோலொன்றினைப் போட்டு அதிர்ச்சியளித்தது. தொடர்ந்து இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணமிருந்தன. இதனால் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கிய ஞானமுருகன் இளைஞர் கழக அணி மேலுமொரு கோலைப் போட்டது.

இதனால் முதற்பாதியாட்டம் நிறைவுறுகையில் ஞானமுருகன் இளைஞர் கழக அணி 2:0 என்னும் கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.தொடர்ந்தும் 2 ஆவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் இளைஞர் கழக அணி இரண்டாவது பாதியிலும் மேலுமொரு கோலைப் போட்டு வலுவான நிலைக்கு வந்தது.

போட்டி நிறைவுறுகையில் மேலும் எந்தவித கோல்களும் போடப்படாமையால் 3:0 என்னும் கோல் கணக்கில் ஞானமுருகன் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யபட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளின் 2014 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகியது. (க-23)

# சங்கானை பிரதேச இளைஞர் கழக பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**துடுப்பாட்டம்**

ஆண்களுக்கான துடுப்பாட்டத்தில் முதலாமிடத்தினை கலைநகர் இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தினை நிலாஒளி இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான துடுப்பாட்டத்தில் முதலாமிடத்தினை சரஸ்வதி இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தினை விக்டோரியா இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டன.

**எல்லே**

ஆண்களுக்கான எல்லேயில் முதலாமிடத்தினை மாவத்தை இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தினை வட்டுக்கோட்டை இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டன.

**கரப்பந்து**

ஆண்களுக்கான கரப்பந்தில் முதலாமிடத்தினை சிவப்பிரகாசம் இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தினை மாவத்தை இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டன.

**உதைபந்து**

ஆண்களுக்கான உதைபந்தில் முதலாமிடத்தினை சென்.நியூஸ்ரார் இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தினை ஜேம்ஸ் இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டன.

இளைஞர் கழகங்களுக்கிடையிலான சகல விளையாட்டு நிகழ்வுகளின் புள்ளிகள் அடிப்படையில் சுழிபுரம் விக்டோரியா இளைஞர் கழகம் சம்பியனாகியது.

இரண்டாமிடத்தினை அராலி மாவத்தை இளைஞர் கழகமும். மூன்றாமிடத்தினை அராலி சென். நியூஸ்ரார் இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டன. (க-23)



அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்திற்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன். வலி வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் ஆகியோரால் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பதனை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியை வீழ்த்தி சென்னை அசத்தல் வெற்றி



டெல்லி டேர்டெவில்ஸ் அணியை 93 ஓட்டங்களால் வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 93 ஓட்டங்களால் அசத்தல் வெற்றி பெற்றது. சென்னை சுப்பர் கிங்ஸ்- டெல்லி டேர்டெவில்ஸ் அணிகளுக்கிடையேயான ஐ.பி.எல். 8-வது லீக் போட்டி அபுதாபியில் நேற்று நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற சென்னை அணி கப்டன் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அதன்படி மக்கல்லம்- ஸ்மித் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். கடந்த போட்டியில் கலக்கிய மக்கல்லம் இந்த போட்டியில் 9 ஓட்டங்களில ஆட்டம் இழந்தார். ஸ்மித் 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

சுரேஷ் ரெய்னா சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தார். அவர் 41 பந்தில் 5 பவுண்டரி ஒரு சிக்சருடன் இந்த ஸ்கோரை எடுத்தார். அடுத்து வந்த டு பிளேசிஸ் 24 ஓட்டங்களில, தோனி 15 பந்தில் 32 ஓட்டங்களில எடுக்க சென்னை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 177 ஓட்டம் எடுததது

டெல்லி அணி தரப்பில் உனத்கட் 3 விக்கெட் வீழ்த்தினார்.



பின்னர் 177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி துடுப்பாட்டத்தை தொடங்கியது. ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு கை கொடுத்ததால் டெல்லி அணி வீரர்களால் ஓட்டம் குவிக்க இயலவில்லை. குறிப்பாக பந்து ஸ்விங் ஆகியதால் டெல்லி அணியினர் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இதனால் அந்த அணி 84 ஓட்டங்களுக்குள் 9 விக்கெட்டை இழந்து 93 ஓட்டம வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

குட்லர் நைல் காயம் காரணமாக துடுப்பாடவில்லை. டெல்லி அணியில் அதிகபட்சமாக கார்த்திக் 21 ஓட்டங்களும் நீசம் 22 ஓட்டங்களும எடுத்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர்.

சென்னை அணி தரப்பில் ஈஸ்வர் பாண்டே, ஜடேஜா, அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ரெய்னா தெரிவானார். (க)




## மக்ஸ்வெல்லின் அதிரடி ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாது- வோட்சன்



கிளென் மக்ஸ்வெல்லின் அதிரடி ஆட்டம் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக உள்ளது என்று ராஜஸ்தான் அணியின் அணித் தலைவர் வோட்சன் கூறியுள்ளார்.

ராஜஸ்தானுக்கெதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணியின் வீரர் கிளென் மக்ஸ் வெல் அதிரடியாக ஆடி 89 ஓட்டங்கள் எடுத்தார்.இது அணி 192 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை வெற்றிகரமாக அடைய உதவியாக இருந்தது.

இதுகுறித்து வோட்சன் கூறுகையில், மக்ஸ்வெல் சிறப்பாக விளையாடினார். அவர் ஏதாவது ஒரு தவறான முடிவை எடுத்து ஆட்டமிழப்பார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் அவரது ஓட்டங்கள் சேர்ப்பை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அவருக்கான நாளாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார். (க)

## காணிகளை...

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை யாழ். மாவட்ட செயலககேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணிவரை தொடர்ந்து இடம்பெற்றது.இதன்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்தக் கோரிக்கையினை முன்வைத்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயமாக பாதுகாப்புத் தரப்பினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலிகாமம் வடக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேறவிடாமல் இராணுவத்தினர் அம்மக்களுக்கு சொந்தமான காணிகளை சுவீகரித்து வைத்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகளுக்கு சொந்தமான மக்கள் இடம்பெயரந்த நிலையில் அவர்களின் காணிகளில் மீளக் குடியேற முடியாமல் உள்ளனர. ஆனால் இந்தக்கூட்டத்தில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெயரந்த மக்களின் மீள்குடியேற்றம் குறித்து எதுவுமே கூறப்படவில்லை. வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை மீள் குடியேற்றம் என்பது முக்கியமாகவுள்ள நிலையில் அந்த விடயத்தை புறக்கணித்ததற்கான காரணம் என்ன என்பது தொடர்பாகவும். வலி வடக்கில் தற்போது காணிகள் துபபுரவு செய்யப்படுவதாக கேள்விப்பட்டேன். அந்தக்காணிகளில் இடம் பெயரந்த மக்கள் மீள்குடியேற்றப்படுவார்களா? இல்லாவிட்டால் இராணுவத்தினர் முன்பு அறிவித்தது போன்று இராணுவத்தினர் குடும்பங்களுடன் குடியேற்றப்படவுள்ளார்களா? மக்களின் காணிகளை இராணுவத்தினர் சுவீகரித்ததாக விடுத்துள்ள அறிவித்தலை மீளப்பெறுவார்களா என்று கேள்விகளைத் தொடுத்துக்கொண்டு சென்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உங்களுடைய கேள்விகளை ஒவ்வொன்றாக கேட்டால் பதிலளிப்பது இலகுவாயிருக்கும் என்றார்.

இதனையடுத்து தனது முதற் கேள்வியை நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்தார். அதாவது, இராணுவத்தினரால் காணிகள் தற்போது துபபுரவு செய்யப்படுகின்றது. இந்தக்காணிகளில் இராணுவத்தினர் குடியேறவுள்ளனரா? அல்லது இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற உள்ளனரா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, அந்தக் காணிகளில் மக்கள் தான் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.மக்களை மீள்குடியேற்றவே காணிகள் துப்புரவு செய்யப்படுகின்றது என்று பதிலளித்தார்.

இதேவேளை இந்தக்கூட்டறிக்கையில் மீள்குடியேற்றம் தொடர்பான விடயம் ஏன் முக்கியப்படுத்தப்படவில்லை என்று கேள்வியெழுப்பினார் சுமந்திரன் எம்.பி.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இந்தக்கூட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு ஏனைய விடயங்களுக்குள் மீள்குடியேற்றம் குறித்து ஆராய முன்பு தீர்மானிக்கப்பட்டது என்றார். இருப்பினும் இந்தப்பதிலுக்கு சுமந்திரன் எம்பி உட்பட ஏனைய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு மக்களின் மீள்குடியேற்றம் முக்கியமான விடயம் அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று வாதிட்டனர்.

இதனையடுத்து மக்களின் காணிகள்பொதுத்தேவைக்கென சுவீகரிக்கபடுவதை தடுத்து நிறுத்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால் என்ன என்று சுமந்திரன் எம.பியினால் கேள்வியெழுப்பப்பட்டபோது குறுக்கிட்ட ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏற்கெனவே இந்தவிடயம் தொடர்பாக தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேவேளை மக்களின் காணிகள் மக்களிடமே மீண்டும் வழங்கப்படவேண்டும்என்பதில் எமக்குள் மாற்றுக்கருத்தில்லை என்றும் கூறினார்.

இந்த விடயம் குறித்து விவாதம் நீண்டு கொண்டு செல்லும் போது குறுக்கிட்ட வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கொண்டுவரப்படும் தீர்மானங்களினால் ஒருபோதும் காணிசுவீகரிப்பை தடுத்து நிறுத்த முடியாது. எனவே பாராளுமன்றத்தில் அமைச்சரவையில் பத்திரத்தை தாக்கல் செய்து தடுத்து நிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றார். அதற்கான நடவடிக்கையினை அமைச்சர் எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், பாராளுமன்றத்தில் ஏற்கெனவே இந்த விடயம் குறித்து பல முறை பேசியுள்ளோம். நாம் பத்திரிகைகளுக்காக பேசுவதில்லை. வேண்டும் என்றால் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விடயங்களின் பிரதிகளை உங்களுக்கு தரமுடியும் என்று கூறினார்.

இவ்வாறு ஆளும் தரப்பிற்கும் எதிர்த்தரப்பிற்கும் இடையில் காணி விவகாரம் குறித்து நீண்டநேரம் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இறுதியில் காணிவிவகாரம் குறித்து மற்றுமொரு தீர்மானம்கொண்டு வரப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை புறம் தள்ளப்பட்டதோடு காணி சுவீகரிப்பு விவகாரம் மற்றும் மீள்குடியேற்றம் குறித்து பின்பு பேசுவோம் என்று கூறியபோதும்எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படாமல் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கபட்டது.

இருப்பினும் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை பொதுமக்களிடம் மீளவழங்கி அந்தக் காணிகளிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயரந்த் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஒருமித்த குரலில்வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு 5 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் எங்காவது மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளதா என்று மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட கூட்டமைப்பினர் அமைச்சரிடம் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அக்கறை பகுதியில் 50 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்றார். இதனை கோப்பாய் பிரதேசசெயலாளர் ம.பிரதீபனும் உறுதிப்படுத்தினார்.

இருப்பினும் மேற்படி அக்கறைப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லையென்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாதிட்டனர். இருப்பினும் அப்பகுதியில் 50 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. (செ-6)

## தீபிகாவின் வருகை அதிர்ஷ்டமானது-கார்த்திக்



இந்திய அணியின் துடுப்பாட்டக்காரரான தினேஷ் கார்த்திக் தனது வருங்கால மனைவி தீபிகா வருகையால் தனக்கு அனைத்தும் நன்றாக நடப்பதாக தெரிவித்துள்ளார்.

தினேஷ் கார்த்திக் மற்றும் இந்திய ஸ்குவாஷ் நட்சத்திரம் தீபிகா பல்லீகலுக்கும் உள்ள காதல் அனைவரும் அறிந்த ஒன்றே.

இருவருக்கும் நிச்சயம் செய்துள்ள நிலையில். விரைவில் திருமணம் நடக்கவுள்ளது.இதனிடையே. இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வந்த தினேஷ் கார்த்திக். ஐ.பி.எல் நிர்வாகத்தால் டெல்லி அணியில் ரூ. 12.5 கோடிக்கு வாங்கப்பட்டார்.

இது பற்றி அவர் கூறுகையில். தீபிகா பல்லீகல் தனது வாழ்க்கையில் வந்த பின், எல்லாமே நல்லதாகவே நடக்கிறது.

பெங்களூரு அணிக்கு எதிரான முதல் போட்டியில். அணித்தலைவர் அந்தஸ்தும் தேடி வந்தது என்று தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார்.

வரும் மே மாதம் இங்கிலாந்து சென்று இங்கிலாந்து ஓபன் ஸ்குவாஷ் தொடரில் பங்கேற்கவுள்ள தீபிகா இதற்கு முன் கிடைத்த நேரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வந்து இங்கு நடக்கும் அனைத்து ஆட்டங்களையும் பார்க்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை தனி...

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மத்திய அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கடுமையாக சாடியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதன் முறையாகநேற்றுக் காலை 21 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2013-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதந் தொடக்கம் 2014 ஜனவரி வரையில் அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைக்கலாம் என்ற எண்ணத்தில் செயற்பட்டோம். இவ்வருடம் ஜனவரி 2ந் திகதி ஜனாதிபதியையும் சென்று சந்தித்தேன்.

அத்தருணத்தில் 13-வது திருத்தச் சட்டத்தின் வலுவின்மையைச் சுட்டிக்காட்டி அதன் கீழான கட்டமைப்புக்கள் போதியவாறான அதிகாரங்களைத் தராத பட்சத்திலுங் கூட போறினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நலன்கருதி நாங்கள் ஒத்துழைக்க முன்வந்துள்ளோம் என்ற கருத்தைத் தெரிவித்தேன்.

அந்த நேரத்தில், தேர்தலில் எம் மக்கள் ஆதரவைப் பெற்ற வடமாகாணசபை உறுப்பினர்கள் தற்போது செயற்பட்டு வருவதால் ஜனாதிபதி செயலணியின் பணிகள் அனைத்தையும் எமக்குக் கையளிக்குமாறு கோரினேன். தொடர்ந்து அவற்றை எம்மால் பரிபாலித்து வரமுடியும் என்றும் கூறினேன்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது பற்றிய எமக்குச் சார்பான ஒரு முடிவை ஜனாதிபதி இதுகாறும் எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரசாங்கக் கட்டமைப்புக்களே வடமாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றன. இங்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அரசியல் யாப்பில் மாகாண சபைகளுக்கென சில விடயங்களும், மத்திய அரசாங்கத்திற்கென சில விடயங்களும், இருவற்றிற்கும் பொதுவான சில விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால் தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் ஊடாக சட்டத்தால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனியான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் தன் வசப்படுத்த இடமளிக்க முடியாது. அந்த அதிகாரங்கள் ஊடாக அவ்வந்த விடயங்கள் சம்பந்தமாக கொள்கைகள் வகுப்பதும் அவற்றை நெறிப்படுத்தி நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபைகளையே சாரும் என்பதை இத் தருணத்தில் கூறி வைக்கின்றேன். அவ்வாறு நடக்கத் தலைப்பட்டால் மக்களால் புறந்தள்ளப்பட்டவர்கள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்களின் தோளில் ஏறிச் சவாரி செய்பவர்களாய் ஆகி விடுவர். இது ஜனநாயகத்தைப் பாதிக்கும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

ஜனவரி 2-ந் திகதிய சந்திப்பின் போது எல்லா மாகாண சபைகளையும் ஒரே மாதிரியாகவே தாங்கள் நடத்திச் செல்வதாக ஜனாதிபதி கூறினார். ஆனால் அதற்குப் பதில் அளிக்கும் வகையில் நான் கூறினேன்- வடமாகாணம் மற்றைய மாகாணசபைகள் போலல்லாது போரின் உக்கிரத்தில் இருந்து விடுபட்டு வந்துள்ளதால் அதன் பிரச்சனைகளும், தேவைகளும் விசேடமானதும், தனித்துவமானதும் என்று. அத்துடன் அவற்றிற்கான தீர்வுகள் பிற மாகாணப் பிரச்சினைகளைத் தீர்ப்பது போலல்லாது வேறு விதமாக அமைந்திருப்பன என்பதையும் சுட்டிக் காட்டினேன். எல்லோருக்கும் ஒரே மாதிரியான சப்பாத்து சைஸ் பொருந்தும் என்று நினைப்பது தவறு என்றுங் கூறி வைத்தேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

(செ-6)

## பிரபாகரனின்...

முல்லைத்தீவு பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த இறுதிக்கட்ட போரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனும், அவருடன் இருந்தவர்களும் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

அந்த பகுதியில் உள்ள புதுக் குடியிருப்பு என்ற இடத்தில் பிரபாகரன் தங்கி இருந்த பதுங்கு குழியை இராணுவத்தினர் கண்டு பிடித்தனர்.

பூமிக்கு அடியில் பாதுகாப்புடன் கோட்டை போல் அமைக்கப்பட்டு இருந்த அந்த பதுங்கு குழியை ஏராளமான பேர் சென்று பார்த்து வந்தனர். இதனால் அது சுற்றுலாத் தலம் போல் விளங்கியது. அந்த பதுங்கு குழியை இராணுவத்தினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

தற்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மேலும் ஒரு வீட்டினை இராணுவத்தினர் தற்போது கண்டு பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஆனந்தபுரம் பகுதியிலேயே இந்த வீடு கண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இறுதி போரின் போது இந்த வீட்டையும், பதுங்கு குழியையும் விடுதலைப் புலிகள் குண்டு வைத்து தகர்த்து உள்ளனர். இதனால் வீட்டின் உள்ளே என்ன இருக்கின்றது என்பதை படையினர் கண்டறிய முடியவில்லை.

கட்டிடம் சரிந்து நுழைவாயில் அடைக்கப்பட்டு உள்ளது. எனினும், இராணுவத்தினர் துளையிட்டு பார்த்துள்ளனர். வீட்டின் உள்ளே இருந்து துர்நாற்றம் வீசியதாக கூறப்படுகிறது.

இடிந்த நிலையிலுள்ள இந்த வீட்டின் பின்புறத்திலிருந்து ஆரம்பிக்கும் பதுங்கு குழி சுமார் 300 மீட்டர் முதல் 400 மீட்டர் வரை உள்ளது. நிலத்திற்குக் கீழ் இது அமைக்கப்பட்டு உள்ளது.

மேலுள்ள வீடு செங்கல்லால் கட்டபட்டுள்ளது. இறுதி போரில் இந்த வீட்டிலிருந்தபோதே பிரபாகரன் சுற்றிவளைக்கப்பட்டதாக இராணுவ தரப்பில் கூறப்பட்டு உள்ளது.

தற்போது இந்தப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வீட்டை சென்று பார்க்க முடிகிறதாகவும் எனினும், உள்ளே சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(செ-11)

## தமிழின...

இணைத்தலைமையில் யாழ். மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் முதன் முறையாக நேற்றுக் காலை 21 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றுள்ளது.

இதில் விவசாய திணைக்களம் குறித்து ஆராயப்பட்டபோதே அமைசசர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 400 இளைஞர்களை ஈடுபடுத்தி பார்த்தீனியம் ஒழிப்பில் நாம் ஈடுபட்டோம். இந்த பார்த்தீனியம் ஒழிப்பிற்கு யாழ் மாவட்ட செயலகத்திற்கு என 3 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது இந்த பார்த்தீனியம் ஒழிப்பில் இராணுவத்தினரின் பங்களிப்பும் தேவை என நாம் ஒருபோதும் கருதவில்லை.

இருப்பினும் இராணுவம் வந்து பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபட்டால் நாம் அதையும் தடை செய்யவில்லை ஆனால் அவர்கள் தலையிடுவதனால் மக்கள் அச்சத்திற்குள்ளாக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக பெண்கள் அச்சப்படுகின்றார்கள். இராணுவத்தினருடன் ஒத்துழைத்து பார்த்தீனிய ஒழிப்பில் ஈடுபட தயக்கம் காட்டுகின்றனர்.

ஆகவே மாகாண விவசாய அமைச்சு இதனை பொறுப்பெடுத்து இந்த பார்த்தீனியத்தை முற்றிலும் இல்லாமல் செய்வதற்கு முயன்று செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத்தினர் பார்த்தீனியம் செடி ஒழிப்பில் ஈடுபடுவதற்கு பதிலாக அதனை அழிக்க முடியாத நிலைக்குக் கொண்டு வந்து விட்டுவிடுகின்றனர். மேலும் இங்கு தேசிய கொள்கை பற்றி பேசப்பட்டது எம்மைப்பொறுத்தவரை இலங்கை அரசின் தேசியக் கொள்கையானது தமிழினத்தையே ஒட்டுமொத்தமாக அழிக்கும் வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(செ-6)

## பார ஊர்தி...

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விறகுகள் மற்றும் குடிநீர் போத்தல்களை ஏற்றிக் கொண்டு சென்ற இப்பாரவூர்தி மின்கம்பமொன்றுடன் மோதி குடை சாய்ந்ததிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(செ-6-84-259-254-271)

## இலங்கை...

னாபிரிக்கா விருப்பம் தெரித்திருந்த நிலையில், கொழும்பில் கடந்த வருடம் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அத்துடன், இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக சிறில் ரமபோசாவை தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா கடந்த பெப்ரவரி மாதம் நியமித்திருந்தார்.

இதன் பின்னர் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் பேசுவதற்காக இலங்கையின் அரசதரப்புக் குழுவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு அந்நாட்டு அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25வது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படும் வரை தென்னாபிரிக்காவுக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்தின் கவனத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டு சென்றிருந்தது.

அதேவேளை, இலங்கை அரசதரப்புக் குழுவொன்று கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்து இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறியுள்ள நிலையில், தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்து இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாக தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு அந்நாட்டு அரசதரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கு கடந்த 9ஆம் திகதி பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் சிறில் ரமபோசாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் இந்தியா மற்றும் நோர்வே ஆகிய நாடுகளை அடுத்து மூன்றாவது நாடாக தென்னாபிரிக்கா அனுசரணை வகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-11)

## த.தே.கூட்டமைப்பு...

நானும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இல்லாத நாடாளுமன்றத் தெரிவுக் குழு மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கை இல்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் என்று நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தால், நீங்களே இல்லாத தெரிவுக்குழுவுக்கு வருமாறு எங்களை ஏன் அழைக்கின்றீர்கள் என்று அவர்கள் என்னிடம் கேட்கின்றார்கள்.

மறுபுறத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறாத நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் என்ன பயன் என்று ஐ.தே.கட்சி கேட்கின்றது.

போதாக்குறைக்கு ஜே.வி.பி. போன்ற கட்சிகளும் தெரிவுக் குழுவுக்கு வர மறுத்துவிட்டன.

ஆகவே, தெரிவுக்குழு அர்த்தமற்றதாகி வருகின்றது. அரசு இந்த முயற்சியை பலனற்றது என்று கைவிட வேண்டித்தான் நேரும்.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை உரிய முறையில் காணாதவரை சர்வதேசத்தின் நுண்ணாய்வுக்குள் இருந்து இலங்கை தப்ப முடியாது என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டிருக்கின்றார்.

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசினால் நியமிக்கப்பட்ட சர்வ கட்சி மாநாட்டுக் குழுவின் தலைவராக செயற்பட்டவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

ஆனால் தற்போது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசினால் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அவரை அரசு சேர்த்துக் கொள்ளவில்லை.

அதற்கு, ஆளும் கூட்டமைப்புக்குள் இருக்கும் தீவிர தேசியவாதக் கட்சிகளின் கடும் அழுத்தத்துக்கு அரசு சரணாகதி அடைந்ததே காரணம் என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண.

(செ-11)

O/L சித்தியில்லை, IELTS, நிதி நெருக்கடியால் உங்கள் வெளிநாட்டுக்கனவு தடைப்பட்டுள்ளதா?

3 மாதம் வெளிநாட்டில் தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்து UK, New Zealand, Australia, Switzerland மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல புதிய வாய்ப்பு

முதல் 5 பேருக்கு விசா 100% இலவசம்

இவ்வார SPECIAL



- O/L சித்தியிருந்தால் UK க்கு 4 வருட விசா
- A/L 3S உடன் 29 நாடுகளுக்கான செங்கன் விசா
- A/L 1C 2S உடன் China வில் MBBS / Dental
- A/L 3C உடன் Germanyயில் Engineering (With Scholarship)*
- BSc 60% உடன் Italy யில் MSc
- Australia/New Zealand Student Visa & Work Permit
- Dubai, Qatar உடனடி வேலைவாய்ப்புக்கள் (ஆண்/பெண்)

அனைத்துச் சேவைகளுக்கும் 3 வருட சேவை உத்தரவாதம்*

FREE OFFER அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ENGLISH THE EASYWAY ஆங்கிலக் கற்கைநெறி முற்றிலும் இலவசம்

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sikaram TakeOff

மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk முற்பதிவு: 077 36 16 798

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் மேற்கு புகையிரத நிலைய வீதிக்கு அண்மையில் உள்ள 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:

சி. ஹரிமுகன்

0774434501, 4167226557

கனடா

(6193)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org